# இந்துசாதனம்.

(1889)

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

**பத்திரக் கிரயம்.**

யாழ்ப்பாணப் பட்டினம்: ஆ 1-க்கு ரூ. 5-60
வெளியூர், இந்தியா: ,, ரூ. 9-40
தொடுவாய்ப்பகுதி: ,, ரூ. 9-40
தனிப்பிரதி: சதம் 6
முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

**விளம்பர விகிதம்.**

முதன் முறைக்கு:—ஒருகலம் ரூ. 9-40
,, அரைக்கலம் ரூ. 5-00
,, கார்க்கலம் ரூ. 3-15
,, ஒரு அங்குலம் சதம் 65
அடுத்த முறைகட்கு ஷை விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—கஎ } யாழ்ப்பாணம்:—குரோதனஹு ஆவணிமீ கஉ; (1925 ஆகஸ்ட் 24) திங்கட்கிழமை. { இலக்கம்—கரு.


உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா னணர்ச்சி தேக்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவாணந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்த விநாயகனருள் வணம் வாழ்வாம்

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


தேசப்பெரியார்கள்
அநேகர் விரும்பி உபயோகித்தும்
சமையல் அடுக்கு
**ருக்மணிகுக்கர்தான்.**

கனம் எட்டியாபுரம், ராஜா, டாக்டர் வரதராஜுலுநாயுடு முதலிய அநேக கனவான்களால் நன்குமதிக்கப்பட்டுள்ளது. இதனால் ஒருமணிக்குள் கஷ்டமில்லாமல் சாதம் 4, 5 பதார்த்த வகைகள் செய்யலாம்.

அளவு ஒருவர் 2 4 6 8 பேர்.
விலை ரூபா 13. 18 22 27 33.
விபர புத்தகம் இனும். ஏஜண்டுகள் தேவை.
இன்றே ஒரு குக்கர் வாங்குங்கள்.

ருக்மணி குக்கர் கம்பெனி,
(Y. 45.) இராயபுரம், மதராஸ்.



## Hakeem, M. Mohamed Ebraheem & Co;
HAMEETHIA AYURVEDIC UNANI
MEDICAL HALL.
POTO-NOvO (South India)

அருமைத் துரைகளே! பொறுமையாய்க் கவனியுங்கள்!

இழந்துபோன பலத்தையும், நலத்தையும், நரப்புத் திடத்தையும் அதி அற்புத ஆச்சரியமான சுக சக்தியையும் இது உபயோகித்த ஒரே வேளையில் தெரிந்துகொள்ளலாம்.

ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிக் கடிதங்களும்
தங்க மெடல்களும் பரிசு பெற்ற
[illegible] போஹன

## சிட்டுக் குருவிச் சத்தின் லேகியம்.

அசல் பாகம்! —o— அருமையானது!!

பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்தரவாதமுள்ளது. இந்தப் பாகம் சரியாக வேறு எந்தக் கம்பெனியார்களும் செய்து காட்டினாலும் அல்லது இது நாங்கள் உண்மையான பாகப்பிரகாரம் சரியாக செய்யவில்லை என்று ருஜுவித்தாலும் சரியே அவர்களுக்கு எங்கள் கம்பெனியால் ரூபா 1000 இனும் கொடுக்கப்படும்.

### அன்பின் மிக்குள நண்ப சிகாமணிகளே!

அருமையும், அனுபவமும், பெருமையும், பிரபல்யமும், மஹா அற்புத ஆச்சரிய சக்திகளும் வாய்க்க இந்த அசல் "முபற்ரு" லேகியத்தை உபயோகிக்கும் உத்தமர்கள் இவ்வாழ்க்கையிலே நாம் என்றுங் கண்டிராத சித்தானந்த செயபீர சித்சுகவிம்ப நலன்களையும், சில அற்புத குணங்களையும் தெரிந்துகொள்வார்கள். ஆஹா! குணத்தால் சிறந்த இந்திரலோகத்திய "மகாசஞ்சீவினி" இதுதானோ? என்றும் பன்முறையும் புகழ்வார்கள். ஆனால் பிறந்து இவ்வுலகத்தில் வளர்ந்து இளம் பால்யப் பருவத்திலேயே துர்ப்கோய்வாய்ப்பட்டுக் கெட்டும், இன்னும் பலவித காரணங்களினாலும் தேறாநிற்கு சத்சாரணமாகிய நல்விரத்தத்தை வீண்விரயஞ்செய்தும், நல்ல வாலிபப் பருவத்தில் வாத பித்த சிலேற்பன பிகுதிக் குறைவாலும், எலும்புருக்கி முதலான வெப்புரோகங்களினாலும் ஜீவரத்ன பீடமாகிய தேகம் தளரப்பெற்றவர்களும், வித்திராபங்கம் என்னும் ஓர்வித கொடிய நோயினால் எப்பொழுதுஞ் சஞ்சலப்பட்டுக்கொண்டிருப்பவர்களும், சுரம் பிரமேகம் விஷப்பாண்டு முதலிய வியாதிகளால் இரத்தம் கரைந்து சர்வ நாம்புகளுந் தளர்ந்து ஐம்புலன்களின் உற்சாகமும் குறைந்து, ஞாபகசக்திக் குறைவு, கை கால் அசதி, தேஹாரங்கை, இடுப்புவலி, பசிமந்தம், மலச்சிக்கல் முதலிய வியாதிகளால் சதா வருந்துவோரும்,

மனோ தத்வ புத்திசாதுர்யத்தைக் கொண்டு வேலைசெய்யக்கூடிய லாயர்கள், குமாஸ்தாக்கள், பாடலீகர்களும், மற்றும் ஞாபகசக்தியால் வேலையையுடைய, எந்தத் தொழிலாளர்களும் இதனை உபயோகித்தால் நல்ல உற்சாகமும், சந்தோஷமும் அடைவார்கள். திடமான தேஹக் கட்டுப்பாட்டையும், புதிய மேனியையும், இரத்தவிர்த்தி ஞாபகவிர்த்தி சந்தானவிர்த்தி முதலிய சர்வ நலன்களையும் பெறுவார்கள். தாருட்யசக்தியின் குறைபாட்டினால் ஏற்பட்ட பலவிதமான நோய்களினாலும், பீடிக்கப்பட்டு இரவும் பகலும் அதுவே கவலையிலானவர்களுக்கு திட்டமாக குணம் செய்வதில் இது மகா வல்லமையும் பேரும் பிறகீர்த்தியும் பெற்றது. இதனை பரிக்ஷிக்கும் ஒவ்வொரு நண்பர்களுக்கும் தப்பாமல் குணம்செய்யும். சத்தியமான சித்தானந்த யோகபாகம் இதுதான என்று நாம் சொல்லவேண்டியதில்லை. பலனும் நலனும் சில அற்புத ஆச்சரிய வல்லமையக் குணங்களும் ஒரே வேளையில் தெரியும். கண்டாலே தெரியும் காஷி! தின்றாலே தெரியும் திடன்!! இத்தகைய குணங்கள் இதில் இல்லையென்று சத்தியமாகச் சொல்லுகிறவர்களுக்கு எமது கம்பெனியிலிருந்து ரூபா 1000 இனும் கொடுக்கப்படும். பரிக்ஷை செய்யவும். உபயோக விபரம் கூடவே வரும்.

அன்பர்களுக்கோர் அறிவிப்பு:—

இக்காலத்தில் சில போலி வைத்தியர்கள் கிளம்பி பலவித இமிட்டேஷன் லேகியங்களையே ஷை சிட்டுக்குருவி லேகியமென்று விற்று வருகிறார்கள். ஆகையால் அத்தகைய லேகியங்களைத் தருவித்து மோசம்போய்விடாமல் நமது விலாசத்தைக் கவனித்து எழுதவேண்டியது. ஷை முழுபாகம் தருவிப்பவர்களுக்கு உசித இரசமணி 1 இனும்.

| | | |
|---|---|---|
| | 40 நாள் மருந்து 16 பலம் டப்பி 1-க்கு விலை ரூபா | 10—0—0 |
| | 20 நாள் மருந்து 8 பலம் டப்பி 1-க்கு விலை ரூபா | 5—0—0 |
| பரிக்ஷைக்கு | 10 நாள் மருந்து 4 பலம் டப்பி 1-க்கு விலை ரூபா | 3—0—0 |

வி. பி தபால்செலவு முதலியன முழுபாகத்திற்கு அணு 12ம், அரைபாகத்திற்கு அணு 7, கால்பாகத்திற்கு அணு 5ம் பிரத்தியேகம். மருந்தின் கிரயத்தை முன்பணமாக அனுப்புகிறவர்களுக்கு போஸ்டிங் சார்ஜ் இனும்.

[illegible] கவனிப்பு:—பினங்கு, சிங்கப்பூர், குவாலாலம்பூர், செட்டாம், மோரீஸ் முதலிய வெளிப்பிரதேசங்களில் உள்ளவர்கள் மருந்தின் கிரயமும், தபால் செலவு ரூபா 2ம் சேர் முன்பணமாக மணியார்டர் அல்லது போஸ்டல் ஆர்டராக அனுப்பியே மருந்து பெறவேண்டும். நமது விலாசம்:—

ஹக்கீம், எம். முஹம்மது இபுறாஹீம் அண்ட் கம்பெனி,
மானேஜர், ஏ. முகம்மது ரூசுபு,
ஹமீதியா ஆயுர்வேத யூநானி வைத்தியசாலை,
(Q. 63). பறங்கிப்பேட்டை (தென்னிந்தியா).



[ESTABLISHED 1609]
## MESSRS. A. S. M. A. KHADER BROTHERS
Kairul Muslimeen Medical Hall
PORTONOVO (*SouthArcotDistrict*).

### ஏஜண்டு தேவை.

குழிக்கப்போய் சேற்றைப் பூசிக்கோள்வதுபோல்
வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.
அடியிற் கண்ட லேகியத்திற்காக ரூபா **1000** இனுமளிக்கப்படும்.

இந்த லேகியம் சாப்பிட்ட 3மணி நேரத்திற்கெல்லாம் சப்த தாதுக்களின் பலத்தையும் வீரிய உற்சாக தத்துவத்தையு மடைவிக்கச் செய்யவில்லையென்றுவது பரீட்சைசெய்யும் அன்பர்களுக்கு பலனைக் கொடுக்கவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின் பணத்தை உடனே வாப்ஸ் கொடுத்துவிடப்படும்.

அசல் பாகம் சந்தோஷிக்கச் செய்வது
உத்தரவாதமுள்ளது.

## சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இந்த லேகியம் முற்காலத்து மன்னர்களால் உபயோகித்து வீரியசக்தி குறையாது இல்லறை இவைவாழ்க்கையையடைந்து புத்திர பௌத்திர சம்பன்னராய் நீடூழி வாழும்பொருட்டே நமது முன்னோர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஔஷத பாகங்களிற் சிறந்ததும், இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களை அடையக்கூடியதுமான ஒப்பற்றதோர்புருஷசஞ்சீவியாகின்றது. மற்றவிபரங்களை நமதுகேட்லாக்கில்காணலாம்.

**லேகியத்தின் முக்கிய குணமாவது.**

வாத பித்த சிலேத்ம பிகுதி குறைவால் ஏற்படும் இரத்தக்குறைவு, ஏழுவகைத்தாதுக்களின் பலஹீனம், அஸ்தி வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீர்ச்சுருக்கு, நீரெரிச்சல், நீர்த்தாரை பெருத்தல் ஆகிய நோய்களையும், நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாதுநஷ்டம், நித்திரைப்பங்கம், SPERMATORRHEA, தேகமெலிவு, சதாஇடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஒடித்திரியும் பலவித வாய்வுகள், நெஞ்சுவலி, NERVOUSDISEASES, ஆகிய நோய்களைச் சுகப்படுத்தி, புதியமேனியுடன் இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவதில் இதைவிடச் சிறந்த மருந்து கிடைப்பது அரிதினுமரிது. இச்சிறந்த அபூர்வலேகியத்தின் ஆச்சரிய குணத்தை உடனேக் [illegible] இதனை [illegible] வெளியிட்டிருக்கின்றோம்.

40 நாள் சாப்பிடும் பெரியடப்பி 1-க்கு விலை ரூபா 8—0—0.
20 நாள் சாப்பிடும் சிறியடப்பி 1-க்கு விலை ரூபா 4—0—0.
வி. பி. தபாற் செலவு பிரத்தியேகம்

முற்பணமனுப்பினால் V. P தபாற்செலவு இனும். பினங்கு, சிங்கப்பூர், கிள்ளான், கோலாலம்பூர், ஈப்போ முதலிய பிறதேசவாசிகள் மருந்தின் கிரயமும், தபால்சார்ஜு ரூபா 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். ஷையூர்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் கிருதம் அதாவது ஷை குருவியின் சத்தால் செய்யப்படவில்லையென்றுவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டால் குணமொன்றுஞ் செய்யவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் ருபிப்பவர்களுக்கு அவர்கள் கொடுத்த மருந்தின் கிரயமும் ரூபா 1000 இனுமாயும் கொடுக்கப்படும். அப்படி ருபித்தும் இனுமுடையபணமும் கிரயமும் கொடுபடா விட்டால் கோட்டுமூலமாக வசூல்செய்துகொள்ளலாம். அதன்றியும் மற்றக் கம்பெனியாரின் இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரியகுணமுண்டென்றுவது, அல்லது இச்சிறந்த குண பாக லேகியத்தைச் செய்து காட்டினாலாவதுமுன் கண்ட இனும் கொடுக்கப்படுமென்பதற்கு உத்திரவாதமளிக்கப்படும்.

TEL. ADDRESS:—
Khader Bros.
Porto Novo.
(Y. 38).

என்மேல்விலாசம்:—
மெஸ்ஸர்ஸ் ஏ. எஸ். எம். ஏ. காதர் பிரதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, தென்னுற்காடு ஜில்லா.



## அதிசிரேஷ்டமான தைலம்.


காரகலங்டிப்பான மனுஷனோ ஸ்திரீயோ சரியென மதிக்கும்படியான அநேக முக்கிய சரக்குகள் சேர்ந்த தைலம்

### லிட்டில்ஸ் ஓரியன்றல் பாம்.

இதர தைலங்களைவிட இது ஏன் சிரேஷ்டம்?

1. நோவைக் குணமாக்கும் 12 திவ்விய சரக்குகள் சேர்ந்தது.
2. அவைகளின் சாரத்தை அது தன் திட—திராவ மூல காரணத்திலடக்கி வைத்திருக்கிறது.
3. அதில் வீணுப்போகும் தன்மையே கிடையாது. தினையளவு தைலம் பனையளவு குணத்தைத்தரும்.
4. அதில் அன்னியபொருள் சேர்ப்பில்லை.
5. அதில் மிருகக்கொழுப்பேயில்லை.
6. அது குணஞ்செய்யும். குணமுடையது.

3—L—25.




(Y. 41. A.)

# இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:— குரோதன வூ ஆவணி மீ கூ திங்கட்கிழமை

## உடை.

“உண்டு கெட்டவன் சோனகன் உடுத்துக் கெட்டவன் வெள்ளைக்காரன்” என்ற ஒரு பழமொழி நமது நாட்டில் வழங்குகின்றது. உலகத்தில் வழங்கும் ஏனைய பழமொழிகள் போல இப்பழமொழியும் மிகவும் உண்மையானதாம். நமது நாட்டிலே தம்மைச் சீர்திருந்தினவர்களாகத் தாமே மதித்திருக்கும் அநேகர் ஐரோப்பிய உடையில் ஏதோ அதிக சீர்திருத்தமிருப்பதாக நினைத்து அதனைப் பின்பற்றி இடர்ப்படுவதையும் முட்டுப்படுவதையும் நாம் பிரத்தியட்சமாகக் காண்கின்றோம். தமிழ் மக்களாகிய எங்களைக் காட்டிலும் சிங்களநாட்டு பெரும்பாலார் இந்த அந்நிய உடையைத் தரித்துக்கொள்ளத் தொடங்கி வறுமையுற்று அவமானப்படுகின்றனர். ஐரோப்பிய உடையை இங்குள்ளார் அணியத் தொடங்கியமையினால் வறுமைப்படுகின்றார்களென்ற உண்மையை இப்பொழுது சிங்களருக்குள்ளே கல்வியறிவாலும் உத்தியோகத்தாலும் மேம்பட்டவர்கள் தாமும் நன்கு அறிந்துகொண்டனர்.

சென்ற வாரம் கண்டி நகரத்திலுள்ள பெரிய நீதிஸ்தலத்தில் ஒரு அவ்கானிய வியாபாரி “கிளார்க்” உத்தியோகம் பார்க்கும் ஒரு வாலிபன்மீது கடனுக்காக வியாச்சியந் தொடர்ந்திருந்தான். அப்பொழுது வாலிபன் பக்கத்து நியாயவாதியாகிய மிஸ்ரர் ஆதர் பெரிரா நீதிபதியை நோக்கி “ஐயா, இந்த வாலிபனைப்போன்ற பணமில்லாதவர் பலர் தங்கள் பெண்டிர் பிள்ளைகள் நோய்வாய்ப்படுஞ் சமையத்திற் செய்வதின்னதென அறியாதவர்களாய்ப் பின்வருபவற்றைச் சிறிதும் யோசிக்காது, அவ்கானியரிடம் கவேட்டிக்குப் பணம் வாங்கிக்கொண்டு பின்னர்க் கடன் தீர்க்க முடியாது இவ்வாறு இடைஞ்சற்படுகின்றார்கள்” என்றார். அப்பொழுது, நீதிபதியாகிய மிஸ்ரர் போல் பீரிஸ் நியாயவாதியை நோக்கி “அப்படியல்ல, பெண்டிர் பிள்ளைகள் நோய்வாய்ப்பட்டமையினால் இவர்கள் அவ்கானியரிடத்திற் கடன்படவில்லை; கடன்பட்ட வாலிபனைக் காட்டி, இந்த வாலிபனைப் பாருங்கள். இப்படிப்பட்ட உயர்ந்த உடையை அணிந்துகொள்வதற்கு இப்பையனுக்குப் பொருள் ஏது? இவர்கள் கடன்காரராய் வருதற்கு இவர்கள் கைக்கொண்டிருக்கும் உடையே பிரதானமான காரணமாகும். ஆனால் இவர்களைக் குறை சொல்ல இடமில்லை. படித்தவர்கள் உத்தியோகத்தர்கள் என்றிருக்கும் நாங்களே அந்நிய உடையைப் பின்பற்றி மற்றவர்களுக்கும் வழிகாட்டி விட்டோம். ஆதலால் குற்றம் முழுவதும் எங்களுடையதாகும்” என்றார். அப்பொழுது நியாயவாதியாகிய மிஸ்ரர் பெரிரு “ஐயா, இந்த வாலிபன் இந்த உடையைத் தரித்துக்கொள்ளாவிட்டாற் “கிளார்க்” உத்தியோகம் பார்த்தல் முடியாது; இப்படித்தான் உடுத்திக்கொள்ளுதல் வேண்டுமென அதிகாரிகள் விதித்த ஒரு பொல்லாத பிரமாணம் உண்டு” என்றார். நீதிபதி “ஆம், அது மிகவும் பொல்லாத பிரமாணமென்பதை நானும் ஒத்துக்கொள்ளுகிறேன். சில வருடங்கட்கு முன்னர், உத்தியோகத்தர்களாயுள்ளவர்கள் சட்டை சப்பாத்தின்றி வேட்டி தரித்துக்கொண்டு தங்கள் உத்தியோகஸ்தானங்களிற் சென்று கடமை பார்க்கலாமென அரசினர் அனுமதி செய்திருந்தார்கள். அக்காலத்தில் எல்லாம் வசதியாகக் காணப்பட்டன. அந்தவிதமாக இப்பொழுதும் இருக்குமானால் எத்தனையோ குடும்பத்தவர்கள் முட்டுப்பாடின்றி மனரம்மியத்தோடு வாழ்ந்துவருவார். நீங்கள் யாழ்ப்பாணத்திற்குப் போய்ப் பார்ப்பீர்களாயின் அங்குள்ளார் ஒரு காலத்தில் மேனிலையடைவரெனக் காத்திருப்பதற்குக் காரணமென்ன வென்பதனை நேரிற் கண்டுகொள்வீர்கள்” என்றார்.

டக்டர். பீரிஸ் யாழ்ப்பாணப் பெரிய நீதிஸ்தலத்திற் சில வருட காலம் நீதிபதியாகவிருந்து யாழ்ப்பாணத்தவர்களுடைய பழக்க வழக்க ஒழுக்கங்களையும் உடை நடை பாவனைகளையும் நன்கு அறிந்துள்ளவர். யாழ்ப்பாணத்தவருட் பெரும்பாலார் டக்ரர் பீரிஸ் சொன்ன பிரகாரம் டாம்பிகமான வாழ்க்கையையும் அந்நிய உடையையும் விரும்புகின்றவர்களல்லர். ஆனால் இக்காலத்திலே வாலிபர்களாயுள்ளவர்களுட் பலர் இந்த உண்மையை உணராது சட்டை தொப்பி யணிந்துகொள்ளவேண்டுமென்னும் பிராந்தி பிடித்தவர்களாக விருக்கின்றார்கள். நற்பழக்கங்களையும் சாதியாசாரங்களையும் பயிற்றுவதற்கு உவந்த இடம் வித்தியாசாலையாகும். யாழ்ப்பாணத்திலேயுள்ள அரசினர் வித்தியாசாலைகளிலும் ஏனைய கல்லூரிகளிலும் சட்டை சப்பாத்து அணிந்துகொள்ளுதல் வேண்டுமென்ற பிரமாணமில்லை. இப்படியிருக்கவும் இங்குள்ள சைவக் கல்லூரிகளிற் கல்வி பயிற்றும் சைவ ஆசிரியர்களுட் சிலர் சட்டை சப்பாத்துத் தொப்பி என்னு மிவைகளை அணிந்துகொண்டே கல்வி பயிற்ற வருகின்றார்கள். இவர்கள் இவ்வாறு அந்நிய உடையைப் பின்பற்றுதனால் தமக்கும் மாணாக்கருக்குமாக இருமடங்கு தீமையைச் செய்கின்றார்கள். வேறு உத்தியோகத்தன் ஐரோப்பிய உடையை அணிந்துகொண்டால் அது அவனளவில்மாத்திரம் நின்றுவிடும். மற்றவர்கள் இஷ்டமானாற் பின்பற்றலாகும். இல்லையேல் விடலாகும். ஆனால் ஆசிரியர் விஷயத்திலேனிலோ பெரும்பான்மையும் பிள்ளைகள் தங்கள் ஆசிரியர்களையே பின்பற்றுமியல்பினராக விருக்கின்றார்கள். குரு எப்படியோ சீஷனும் அப்படியாம் என்பர். ஆதலால் இந்த ஆசிரியர்கள் தயவுசெய்து இனியாயினும் அனுவசியகமாகச் சட்டை தொப்பி சப்பாத்திட்டுக்கொண்டு தாமும் இடர்ப்பட்டுத் தம்மாணாக்கர்களையும் இடர்ப்படுத்துவதையொழித்துப் பழையபடி வேட்டி தரித்துக்கொள்ளுதல் பெருநன்மையாகும். ஆசிரியருடைய கல்வித்திறமைக்கும் அவர் அணிந்துகொண்டுவரும் சட்டை தொப்பி சப்பாத்திற்கும் யாதும் சம்பந்தமில்லையாமென்பதை யாழ்ப்பாணத்துமாணவர் நன்கு அறிந்திருக்கின்றனர். ஆசிரியர்களுடைய உடைக்கும் வேதனத்திற்கும் யாதுந்தொடர்பில்லையென்பது வித்தியாசாலை அதிகாரிகட்கு நன்கு தெரியும். சிலவாலிபர் மணவறையில் மணமகனாயிருக்கும்போதும் காற்சட்டை தரித்துக்கொள்ளுதல் வேண்டுமென்னும் பைத்தியத்தின்பாற்பட்டு இடர்ப்படுகின்றார்கள். இப்பைத்தியமான கொள்கைகளையெல்லாம் இனியேனும் விட்டுவிடுதல் நன்றாம்.

வருகிற வியாழக்கிழமை கூடவிருக்கும் சட்டநிருபணசபைக்கூட்டத்திலே கௌரவ ஸ்ரீ சு இராசரத்தினமவர்கள் “ஒழுப்பனவின் பொருட்டு, உத்தியோகத்தர்களும் பள்ளிக்கூட ஆசிரியர் மாணாக்கர்களும் காற்சட்டை சப்பாத்தின்றி வேட்டி தரித்துக்கொண்டு தங்கள் கடமைகளைப் பார்த்தற்கு அரசினருக்கு எவ்வகையான தடையுமில்லை என அரசினர் ஒரு சுற்றுநிருபம் விடவோண்ணுதா” என்ற ஒரு கேள்வியைக் கேட்க உத்தேசித்திருக்கின்றனர். கௌரவ ஸ்ரீ இராசரத்தினமவர்களின் முயற்சி இனிது நிறைவேறுதல்வேண்டுமெனப் பெரிதும் அபேட்சிக்கின்றேம்.

யாழ்ப்பாணப் பட்டின பரிபாலன சங்கம்.
பட்டின பரிபாலன சங்கத்தின்
எட்டாம் வட்டாரப் பிரதிநிதியாக
ஸ்ரீ. மு. தாமோதரம்பிள்ளை
(மாமாத்தம்பி)யைத்
தயவுசெய்து
தெரிவு செய்யுங்கள்.
(Q 66)

## சுந்தரமூர்த்திநாயனர் திருவொற்றியூரைவிட்டுப்பிரிதல்.

திருவொற்றியூரின்கண்ணே சங்கிலியாரைச் சிவாஞ்ஞைப்படி விவாகஞ் செய்த சுந்தரமூர்த்திநாயனர் அங்கு இனிது வாழ்வாராயினர். நாயனர் உலக வாழ்க்கையிற் சிறிது மூழ்கினரெனினும் சிவபெருமானுடைய திருவடிக்கமலங்களை ஒருபோதும் மறந்திலர். இங்ஙனஞ் சிலகாலங் கழிதலும் திருவாரூர்த் தியாகராசப்பெருமானுக்குரிய வசந்தோற்சவகாலம் சமீபித்தது. தம்பிரான்தோழர் அதனைத் தரிசிக்க வேண்டுமென ஆவல்கொண்டார்; இதுகாறும் தியாகராசப்பெருமானைத் தரிசியாமைபற்றி வருந்தினர்; அங்கிருந்தவாறே திருவாரூர் வன்மீகநாதர் மீது “பத்திமையும் அடிமையையும்” என்னும் சொற்றொடரையுடைய தேவாரத் திருப்பதிகம் பாடியருளினர். அப்பாடலில் “பத்தி நிலையையும் அடிமைத் தொண்டையும் கைவிட்ட பாவியாகிய என்னைப் பிடித்துள்ள துயரையிட்டுப் புற்றிடங்கொண்டஈசர்பால் முறையிடுவேனே; மூர்க்கருக்குரிய இலக்கணமெல்லாம் பொருந்தப்பெற்ற அடியேன் பெறற்கரியமுத்தை, மாமணியை, வைரத்தை, என் ஆரூரிறைவனை (அறிவின்மையாற் செய்துகொண்ட ஒரு சத்தியத்தைக் காப்பாற்றும்பொருட்டு) எத்தனை நாளைக்குப் பிரிந்திருப்பேன். இனி இங்ஙனமிருத்தல் கூடா”தெனக் குறிப்பிட்டனர்.

[illegible]ரும் திருவாரூருக்குச் செல்ல [illegible]மென்னும் ஆவல் அதிகரித்தவி[illegible] சமயகுரவர் ஒருதினம் ஆலயத்துட் புகுந்து மாணிக்கத்தியாகராசப் பெருமானையும் தேவியாரையும் வணங்கியபின் திருவொற்றியூரை விட்டுப் புறப்பட்டார். திருவொற்றியூர் எல்லையைக் கடந்தமாத்திரத்தே அவரது கண்களிரண்டும் மறைந்தன. முன்னரே தாம் கூறிய சத்தியத்தை மீறினமையினால் இது நேர்ந்ததென அவர் உணர்ந்தார். தம்பிரான்தோழர் இக்கொடுந்துயரை நீக்கும்பொருட்டு “அழுக்குமெய்கொடுன் திருவடியடைந்தேன்” என்ற சொற்றொடரையுடைய தேவாரத்திருப்பதிகம் பாடியருளினர். அப்பாடலில் “அடியேன் தூயநன்னெறிவிட்டு ஒருகால் வழுக்கி வீழினும் தேவரீரது திருப்பெயரன்றிப் பிறிதொன்றையும் வாயினாற் கூற அறியேன்; ஒற்றியூருறையும் எம்பெருமானே! என் கண்களுக்குற்ற நோயைத் தீர்ப்பதற்கு ஒரு மருந்து கூறவேண்டு”மென எமது சமயாசாரியர் குறிப்பிட்டருளினர்.

இங்ஙனமாகவும் நாயனர் தாம் கொண்ட நோய் சிறிதும் நீங்கப்பெற்றிலர். (தேவராயினும் மக்களாயினும் மற்றேவராயினும் தாம் தாம் செய்துகொண்ட குற்றத்துக்குத் தக்க தண்டனையைப் பெற்றே தீரவேண்டும். எமது நாயனர் சாக்ஷாத் பரம்பொருளாகிய சிவபெருமானால் தடுத்தாட்கொண்டருளப்பெற்ற அதிவிசேடமுடையாரா யிருந்தும், கயிலாசபதிக்கு அவர் தோழராம்பெருமை பெற்றும முன்னரே செய்துகொண்ட சத்தியத்தை மீறினமையினால் இரு கண்களும் கெட வேண்டியவரானர். அதிஉத்தமராகிய எமது சமயகுரவருக்கே இக்கதி நேர்ந்துவிட்டது. இக்காலத்தில் நம்மவருட் பலர் சிறிதும் பிரயோசனமில்லாத அற்ப விஷயத்துக்குந்தானும் கடவுள்மேலாணையிடுவதே தொழிலாயிருக்கின்றார்கள். அங்ஙனம் செய்வோரிற் பலர் அச்சத்தியத்தை மீறிவிடுகின்றார்களென்பதும் உண்மையே. அவர்களுக்கெல்லாம் எமது நாயனருக்குப் போன்று கண்கெட்டுவிடுமென்றதாவெனில் அப்படியன்றும். தம்மிடம் கல்விகற்கும் மாணவனொருவன் குற்றஞ்செய்யுமிடத்து அவனைத் தண்டித்தல் ஆசிரியருக்கு ஆகுமன்றி, கல்வி சிறிதும் பயிலாது காட்டு மிருகங்களைப்போலத் தெருக்களிற் றிரியும் வீணர் தீதுபுரியுமிடத்து அவர்களைத் தண்டித்தல் ஆசிரியராற் கூடாது. அது ஆசிரியர் கடமையுமன்று. வீணர் அங்ஙனம் திரிந்து இறந்துபட்டாரெனினும், பின்னரும் பேதாபேதமாகிய செந்நகளிற் பிறந்தாரெனினும் சந்நில் மாணவனென்றமுறையில்வாரவேண்டும். அங்ஙனம் வருங்கால் ஆசிரியரின் சிட்சைபடுதலும்வேண்டும். அக்காலத்திற்றான் மாணவன் குற்றப்புரியுமிடத்து ஆசிரியரிடம் தண்டனைக்குள்ளாதல் கூடும். மாணவன் அத்தண்டனையை அனுபவிப்பதனால் இழைத்த குற்றத்தினின்றும் விடுதலையடைகின்றன். எனவே எமது நாயனராகிய மாணவகர் சிவபெருமானாகிய ஆசிரியரின் கீழுள்ளவராதல்பற்றி, சத்தியத்தை மீறிய குற்றத்திற்காக உடனே தண்டனை விதிக்கப்பெற்றார். அத்தண்டனையை அனுபவிப்பதனாலே அவர் செய்துள்ள குற்றத்தினின்றும் நீங்கப்பெற்றார்).

எமது சமயகுரவரது இரு கண்களும் பழுதுற்றபோதும் அவர் திருவாரூருக்குச் செல்லவேண்டுமென்னும் பேராவல் தணியப்பெற்றாரல்லர். மெய்படியார்கள் சிலர் முன்னே வழிகாட்டிச் செல்ல நாயனர் அவர்களைப் பற்றுக்கோடாகக்கொண்டு திருமுல்லை வாயிலை யடைந்தார். அங்குள்ள ஆலயத்தை வலங்கொண்டு வணங்கித் “திருவும் மெய்ப்பொருளும்” என்னும் சொற்றொடரையுடைய திருப்பதிகம் பாடியருளினர். அப்பாடலில் “அடியேன் தேவரீருடைய திருவடிக்கமலங்களே திருவும் மெய்ப்பொருளும் மற்றெல்லாச் செல்வமுமெனத் தேர்ந்தேன். அப்பெரும்பேறு எனக்குற்றமை காரணமாக ஒருவரையும் மதியாது தருக்குற்றுத் திரிகின்றேன். திருமுல்லைவாயிலில் எழுந்தருளியிருக்கும் பரஞ்சுடரே! உமது புகழைப் பாடும் பாவியேனுடைய துயரைக் களைந்தருளவேண்டு”மெனக் குறிப்பிட்டனர். அப்பதிகத்துள்ள மூன்றாவது பாடலில் “சங்கிலிக்காகவென் கண்கொண்ட பண்பநின்னடியேன் படுதுயர்களையாய்” எனவும் குறிப்பிட்டனர்.

நாயனர் அங்கிருந்து திருவெண்பாக்கத்தையடைந்து “பிழையுளன பொறுத்திடுவர்” என்னும் சொற்றொடரையுடைய திருப்பதிகம் பாடியருளினர். அவர் அப்பாடலில் “கடவுளே நீர் கோயிலினுள் இருக்கின்றீரா” எனக் குறிப்பிடலும் சிவபெருமான் “உளோம் போகீர்” எனத் திருவாய் மலர்ந்து ஓர் ஊன்றுகோலுங் கொடுத்தருளினர். நாயனர் ஊன்றுகோலைப் பெற்றுத் திருவாலங்காட்டை[illegible] தரிசித்தபின் காஞ்சிபுரத்தை யடைந்து கண்வேண்டிப் பிரார்த்தித்தார். அத்தருணத்திலே எம்பெருமான் எமது சமயகுரவருக்கு இடதுகண்ணைக் கொடுத்தருளினர். அதன்பின் தம்பிரான்தோழர் பல தலங்களையுந் தரிசித்துக்கொண்டு திருத்துருத்தியை அடைந்தார். அங்கும் தமது பெருநோயையிட்டு முறையிட்டார். “நீ இக்கோயிலுக்கு வடபாலிருக்கும் குளத்தில் ஸ்நானம்பண்ணுவையேல் இந்நோய் நீங்கும்” எனச் சிவபெருமான் அருளிச்செய்தார். நாயனர் சிவாஞ்ஞைப்படி அக்குளத்தில் ஸ்நானஞ்செய்தார். அவர் தம்மைப் பிடித்துள்ள நோயினின்றும் பூரண சுகம் பெறலானர்.

## உண்மை நாகரிக உதயம்.

உண்மையான நாகரிகத்துக்குரிய பண்டைக்காலப் பழக்க வழக்கங்களையே நாம் கைக்கொள்ளல்வேண்டும்; சீரிய நிலைமையில் நாம் வாழ்வதற்கு அதுவே ஏதுவாகும் என்பது இக்காலத்தில் அறிஞர் பலரின் அபிப்பிராயமாக இருக்கின்றது. ஆனால், அக்காலத்தில் நீராவிக் கப்பல்களில்லை; புகைரதங்களில்லை; ஆகாயரதங்களிருந்தனவாகச் சொல்லப்படினும் இக்காலத்திற்போல அவை இருந்திருக்கவில்லை, மோட்டர் ரதங்கள் பாட்டுப் பெட்டிகள் தந்தி முதலியன இல்லை; நாகரிகத்தின் ஊற்றுத் துறையான இங்கிலீஷ் படிப்பு அக்காலத்திலேது? அக்கல்வி யில்லாத காலத்திற் சீர்திருத்தம் ஏது? அக்கால மனிதரின் உடை அணிகள் வேறு இக்காலத்தில் இவை வேறு இப்போது பெண்கல்வியின் அபிவிருத்தி பெண்ணே? சீர்திருத்தம் என்னே? ஆனதின் என்ன காரணங் கொண்டு அக்காலத்தை நாகரிகம் உடையதென்று கொள்ளல்வேண்டும் என்னும் எண்ணம் பலரிடத்துக் குடிகொண்டிருத்தலை நாம் அறிவோம். இவர்கள் உண்மையையுணர்தல்வேண்டுமாயின் இவர்களுக்குத் தக்க அறிவும் ஆராய்ச்சியும் ஆவசியகம் வேண்டும். அன்றியும், இந்த எண்ணத்தின்பாற்பட்டு நாகரிகம் அல்லாத பலவற்றை இவர்கள் நாகரிகமாகக் கொள்வதனாலேதான் நமது நாடு கல்குரவு முதலிய பல அனர்த்தங்கட்கும் கொள்கலமாகிவருகின்றது. ஆதலயந்திரங்களும் பிறவும் இல்லாத காலத்திலும் பார்க்க, அவைகளை யுடைமையால் யாத

(ஐந்தாம் பக்கம் பார்க்க)

## கங்காநதிப் பெருக்கு.

இந்தியாவிலே வடபாகமும் வடமேற்பாகமும் பெருமழையினால் அதிக சேதமுற்றன. கங்காநதி அலகபாத்தின் ஒரு பாகத்திற் பெருகியது. பஞ்சாலத் தலைநகராகிய லக்னௌவும் அதன் சுற்றுப்புறங்களும் வெள்ளப் பெருக்கினால் முக்குண்டன.

## கிறிஸ்றிவின்சென்ற் பிடிபட்டான்.

இலங்கையிலே பல இடங்களிலும் பல முறைகளிலும் கப்பிக்கைத் துரோகம் அனுப்புதல் முதலான குற்றச் சாட்டுகளுக்காகப் பலமுறைசிறைபுகுந்த கிறிஸ்றின்சென்ற் என்பவன் இந்தியாவிலும் சிலரை அனுப்பியதற்காகப் பம்பாயிலே இந்திய பொலீசாரால் பிடிக்கப்பட்டான்.

## இத்தாலிய அவ்கானிய சமாதானம்.

பைப்பர்னே என்னும் இத்தாலியனை அவ்கானிய அரசாங்கத்தார் மரணதண்டனை விதித்துத் தூக்கிலிட்டமையைப்பற்றி இருபகுதி அரசினருக்குமிடையே மனஸ்தாபம் சிலகாலமாக ஏற்பட்டிருந்ததென முன்னர் இப்பத்திரிகையில் வெளியிட்டிருந்தோம். அவ்கானிஸ்தானத்திலிருக்கும் இத்தாலிய அரசாங்கப் பிரதிநிதியை அவ்கானிய அரசாங்கத்தார் பொறுதி கேட்டுப் பொலிஸ்தலைமை உத்தியோகத்தனை நஷ்டமிறுக்கும்படி விதித்து அவனை வேலையினின்றும் நீக்கியமையினால் பழையபடி அவ்கானியருக்கும் இத்தாலியருக்குமிடையே சமாதானம் ஏற்பட்டுவிட்டது. இத்தாலிய மந்திரி அவ்கானிய அரசராகிய அமீரை வியந்து பாராட்டியிருக்கின்றார்.

## தென்னிந்தியாவிற் புயலும்இடியும்.

இந்த ஆவணியீ 1உ ஞாயிற்றுக்கிழமை இரவு தென்னிந்தியாவில் உக்கிரமான புயலும் மின்னலும் இடியுமுண்டாயின. திரிசிரபுரம் மலையிலே நூற்றுக்கால் மண்டபத்துள்ள காகிதக் கம்பிகளும் வேறு பல பொருள்களும் எரிந்தன. விளக்குக் கண்ணாடிகள் நொருங்கின. அறுபத்தைந்து வயதுள்ள ஒருவரும் திருவரம்பூரத்துள்ளவர்களாகிய மூன்றுபேரும் இடியினால் மாண்டனர்.

## மணவீட்டில் மதுபானம்

சென்ற முதலாந்தேதி வெளிவந்த 'இந்திய சனசமூக சீர்திருத்தம்' என்னும் பத்திரிகையில் மதுவிலக்கு அனுபந்தத்தில், பூனாவிலே இந்திய மதுவிலக்குப் பெண் சங்கத்தாரின் அக்கிராசனியான மிசிஸ் F. B. பிரின்ஸ் என்னும் ஸ்திரியின் உபந்நியாசம் வெளிவந்திருக்கின்றது. அதில் இலங்கையிலே மதுவிலக்குச் சங்கத்தில் சேர்ந்துள்ள ஓர் சிங்களப் பெண்ணின் அருந் செயலைப்பற்றிப் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அவளுக்கு விவாகம் நடைபெற்றபோது விருந்தாளிகளுக்குக் குடிவகை வழங்கப்படல் வேண்டுமென்று அங்குள்ளார் கூறினர். ஆனால் அவள் அதை மறுத்தாள். அவளின் பிதா 'குடிவகைஉபயோகிக்கப்படாதவிடு மணவீடாகாது' என்றார். 'நல்லது, அங்ஙனமாயின் அந்த கலியாணத்தையே நிறுத்திவிடுவோம்' என்று அவள் கூறினாள். இந்தியாவிலுள்ள பெண்கள் இந்தச் சிங்களப்பெண்ணைப்போற்பிடிவாதஞ் செய்வார்களாயின் குடிவகை யொழிந்துவிடும்.

## தானவரவு.

மண்டைதீவு பிரமஸ்ரீ. சு. சுந்தர ஐயரவர்களுடைய அபரக்கிரியையில் பிரமஸ்ரீ இ. ஞானசேகரக் குருக்களவர்களால் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைக்கு வரித்தனுப்பிய ரூபா ஐந்து பெற்றும்.

## தேகவியோகம்.

கொழும்பிலுள்ள இந்தியா வங்கியின் சிறப்பாராயிருந்த ஸ்ரீ T. சொக்கநாதனவர்களின் ஏகபுத்திரியும், கொழும்பு நகரசங்க வைத்தியராகிய ஸ்ரீ க. பரமநாயகமவர்களின் பாரியாருமாகிய ஸ்ரீமதி ஏகம்மாள் இந்த ஆக்கஸ்ட்மாஉ 16உ ஞாயிற்றுக்கிழமை யிரவு தேகவியோகமாயினரென்னுந் துக்க சமாசாரத்தை யறியலானோம். அகாலத்தில் இவ்வுத்தம குணமுள்ள பெண்மணியை யிழந்து துன்புறும் நாயகன் தந்தை பிள்ளைகள் முதலானோரின் நிலைமை பெரிதும் அனுதாபப்படத்தக்கதாம்

## சீனாவில் மான உணர்ச்சி.

சீன மாணவர்கள் சீனாவில் பாதிரிகள் நிர்வாகத்திலுள்ள சகல கிறிஸ்வக் கல்லூரிகளையும் பள்ளிக்கூடங்களையும் விலக்கிவருகிறார்கள் இத்தமுயற் சிநாள்தோறும் வளர்ந்து வருகிறது. பீக்கிலுள்ள பிரிட்டிஷ் ஸ்தானீகர் காரியாலயத்தில் இருந்த சீன உத்தியோகஸ்தரும் சுயம்பாகிகளுமாகச் சுமார் நூறு பேருக்குமேலாக வேலைநிறுத்தஞ்செய்து விட்டார்கள், மாணவர்கள் அவர்களுக்கு ஒருமாத சம்பளம் கொடுத்து விட்டார்கள். அந்நியர்களிடம் வேலை பார்க்கும் சீனர்கள் வேலையைவிட்டு விடுவதாயிருந்தால் ஒரு மாதச் சம்பளம் கொடுத்து விடுவதாக விளம்பரஞ் செய்து பீக்கின் சர்வகலாசாலையில் ஒருகச்சேரி ஏற்படுத்தியிருக்கின்றார்கள். இவ்வாறு வேலை நிறுத்தஞ் செய்தமை பிரிட்டிஷ் அரசாங்கத்தாரும் சீனாவிலுள்ள பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களும் அவர்கள் தங்குசெய்யும் காரியங்கள் தவறென்பதை உணரும்படி செய்வதற்காகவென்று வேலை நிறுத்தப் பஞ்சாயத்தார் கூறுகிறார்கள். சீனர்கள் தங்கள் ஈனத்தை உணர்ந்துசெய்யுங் காரியங்களை இந்தியர்கள் சிந்திக்க வேண்டுமென லோகோபகாரி கூறுகின்றது.

## இந்தியாவும் இங்கிலாந்தும்.

"உலக ஆதிக்கப் போட்டியும் அமெரிக்காவும்" என்ற புத்தகத்திலே புரொபெஸர் டெமஞ்சியான் சொல்லுகிறார்:—

அமோகமான நலனும் பலனும் பெற, இந்தியாவே ஏற்ற பூமி இந்தியாவின் வளமை மிகுதியும், ஜனத்தொகையும் அப்படியே அத்தேசத்தினை ஆளுவோருக்கு அத்தேசமே புதையல்போல உள்ளது; தற்காப்புக்கு ஏற்ற இடமாகவும் இருக்கின்றது. இந்தியாவைக்கொண்டே பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் நிலைத்துளது. கிழ்த்தேசங்களுடன் ஏராளமான வியாபாரம் நடப்பதற்கு இந்தியாவே இங்கிலாந்துக்குத் தங்குமிடம். வேலைக்கு இந்தியாவிலே ஏராளமான ஆட்கள்கிடைக்கின்றனர். சீனாவிலும் தென்னாபிரிக்காவிலும் இங்கிலாந்துக்காக இந்தியத்துருப்புகள் போர்புரியும். ஐரோப்பிய மகா யுத்தசமயத்திலே பத்துலட்சம் இந்தியர் வேலையிற்சேர்ந்து சேவித்தனர் ஏகாதிபத்தியத்துக்கு வேண்டிய கோதுமையில் நூற்றுக்கு 51 பங்கு இந்தியாவிலிருந்து கிடைக்கின்றது; தேயிலையில் நூற்றுக்கு 58 பங்கு கிடைக்கின்றது; காப்பியில் 73 பங்கு கிடைக்கின்றது. பருத்தியிலோ மிகப் பெரும்பாகம் கிடைக்கின்றது. இந்தியாவிலுள்ள சுரங்கங்கள், தொழிற்சாலைகள் தோட்டங்கள், ரயில் பாதைகள், நீர்ப்பாசனவசதிகள், இவற்றிலே பிரிட்டிஷாரின் மூலதனம் ஏராளமாகக் கிடைக்கின்றது. இதற்கு வட்டியாக இந்தியாவிலிருந்து கிடைக்கும்தொகை3500லட்சம்பவுனாகும். பிரிட்டிஷ் ராணுவ உத்தியோகஸ்தர்களில் பலருக்கு இந்தியா சம்பளம் கொடுக்கின்றது. அச்சம்பளத்தின் மிச்சத்தொகை வருஷா வருஷம இங்கிலாந்துக்குப் போய்விடுகின்றது. கடன் தொகைக்கு வட்டியாக வருஷா வருஷம் இங்கிலாந்துக்கு இந்தியாவிலிருந்து போகும்பணம் 300-லட்சம் பவுன், இனி இந்தியாவுடன் வியாபாரஞ் செய்வோருக்கும் கப்பல் கம்பெனிக்குமாக அது எவ்வளவு பணம் கொடுக்கிறதோ நாம் அறியோம், எனவே, பலனும் நலனும் அமோகமாக அடைய இந்தியாவே ஏற்ற பூமி எனபதில் ஐயமுண்டோ?—சுயராஜ்யா.

# அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக்கட்டளைச் சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் வண்மேற்கு கா. சி. ச. மு. முத்துக்கிருஷ்ணநாயுடு எனபவரிடத்தில் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி ஷெ சட்டத்தின் 12-ம்பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

இல. உ. ரூபா. ஊர் பெயர் நகைகளின் விபரம்.

1924-ம்ஞு மேமாஉ

678 19 250 பரங்கித்தெரு யோசேப்பு பேதுருப்பிள்ளை பொன் டிம்மிபதக்கத்தில்முத்து37 சிகப்புக்கல் 1-ம் பச்சைக்கல் 1-ம் பதித்த செட்டிப்பூரணட்டியல் 1 முத்து 6, சிகப்புக்கல் 1-ம் பதித்த காதோலை சோடி 1

719 29 20 அளவெட்டி கந்தவனம் சின்னத்தம்பி இமிட்டேஷன் நீலக்கல் …ரம் 1

727 31 40 வண்மேற்கு சிதம்பரப்பிள்ளை பொன்னையா சிகப்புக்கல் 6 வெள் [illegible] 1 பதித்த காதோலை சோடி 1

ஜுன்மாஉ.

747 2 35 நல்லூர் முத்தையா செல்லக்குருக்கள் பொன்பணமுடிப்பட்டணங்காப்புச் சோடி 1

778 6 20 சோனகதெரு அசனுமரைக்காயர் அப்துல்கரீம் பொன் தனிப்பட்டுமணிக்கோர்.1

806 11 25 மானிப்பாய் வைத்திலிங்கம் இளையதம்பி பொன்சாதாமோதிரம்1 இமிட்டேஷன் சிகப்புக்கல் 1 வைத்த மோதிரம் 1 பொன் கொடி 1

828 16 160 கொட்டடி வேலாயுதர் நவசிவாயம் பொன் சங்கிலிக்கொடி 1

839 17 60 மாவிட்டபுரம் கதிர்த்தம்பி சுப்பிரமணியம் பொன் புறுத்தாலிக்கொடி 1

844 18 85 கொக்குவில் மாப்பாணர் மாரிமுத்து பொன் பீலிக்காப்புச் சோடி 1

858 20 30 சண்டிக்குளி யக்கோமுத்து மனுவர்ப்பிள்ளை பொன் சிறுசெட்டிக்காப்புச்சோடி 1 கொண்டப்பூ 2

880 23 65 மண்டதீவு கதிரவேல் சண்முகம் பொன் கிளிக்காலட்டியல் 1

881 23 50 செம்மாதெரு அப்துல்கனி பீர்முகம்மது பொன் புஸ்பராக மோதிரம் 1 கிளாவர் மோதிரம் 1 அரும்பு மோதிரம் 2 திருகில்லாத காதப்பூச் சோடி 1 மஞ்சள் சிகப்புக்கல் பதக்கத்துடன் சிசுமணிக்கோர்வை1

885 24 150 சங்குவேலி சின்னத்தம்பி கனகசபை பொன்திருகு சுரையில்லாத செட்டிக்காப்புச் சோடி 1

888 25 11 வண்வடக்கு கணபதிப்பிள்ளை கந்தையா பொன் சாதாமோதிரம்1 பொன்தடை1

ஜுலைமாஉ.

923 2 135 சிறும்பியடி கந்தையா சுந்தரப்பிள்ளை பொன் திருகு சுரையில்லாத தாலிச்சங்கிலிக்கொடி 1

938 7 20 நவாலி காத்தி சபாபதி பொன் பதக்கத்துடன் சவுக்கு மணிக்கோர்வை 1

விற்பனவு:— குரோதனஞு ஆவணிமீ 14உ (29—8—25) சனிக்கிழமை காலை 10 மணியளவில் எடுபட்ட நகை பிறகிளலாக ஷெ கடையில் பிரசித்த ஏலத்தில்விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை உடையார்,
வெத்தீஸ்மேஸ்தர்.

(Mis 695.)

# அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக்கட்டளைச் சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் வண்மேற்கு ந. சு. ப. க. பழனிச்சாமிப்பிள்ளையிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி ஷெ சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

இல. உ. ரூபா. ச. ஊர். பெயர். நகைகளின் விபரம்.

1924ஞு ஜுன்மீ.

344 12 5 50 செட்டித்தெரு சுப்பிரமணியஞ்செட்டி செல்லக்கண்ணு பொன் இமிட் கல்வைத்த பட்டம் 2

378 21 10 அத்தியடி நன்னித்தம்பி சபாபதி வெள்ளித்திருகுப்போட்ட கொண்டப்பூ 1

379 21 51 கந்தர்மடம் முருகேசு கணபதிப்பிள்ளை பொன் குண்டுச்சங்கிலி 1 வெள்ளி ஒட்டியாணம் 1

380 21 12 மன்னுகட்டி கந்தையா வள்ளியம்மை பொன் சாட்டட்டியல் 1

387 23 50 தலையாளி முத்துக்குமாரு முருகேசு பொன் கம்பிப்பூரணட்டியல் 1

393 25 55 சண்டிக்குளி காசியர் கந்தையா பொன் பட்டணக்காப்புச்சோடி 1

ஜுலைமாஉ.

464 11 40 கந்தர்மடம் கந்தன் சின்னத்தம்பி பொன் தாலிக்கொடி 1

466 12 30 உரிகட்டுவான் சின்னட்டி இராமலிங்கம் பொன் பட்டணக்காப்பு 1

467 13 40 திராவியடி கந்தர் சங்கரப்பிள்ளை பொன் பீலிக்காப்புச்சோடி 1

495 20 12 வண்கிழக்கு ஆறுமுகம் கந்தையா பொன் சாதாமோதிரம் 1

498 21 6 வண்மேற்கு கந்தசாமி வேலுகோபால் பொன் வெள்ளைக்கல் சிகப்புக்கல் சோடி 1

518 28 35 வண்மேற்கு காசுநாதர் தம்பிமாதாப்பிள்ளை பொன் கம்பிப்பூரணட்டியல் 1

529 30 24 சோனகதெரு முகமது அப்துல்காதர் முகமது மீராமுகைதீன் பொன் செட்டிக்காப்புச்சோடி 1

ஆகஸ்ட்மீ.

535 1 70 பரங்கித்தெரு சே. எம். அந்தீன் பொன் கொழும்புக்காப்புச் சோடி 1

557 7 77 அத்தியடி கந்தையா சண்முகம் பொன் மஞ்சள் சிகப்புக்கல் பதக்கத்துடன் சாட்டட்டியல் 1

விற்பனவு:— குரோதனஞு ஆவணிமீ 13உ (28-8-25) வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் எடுபட்டவை பிறகிளலாக ஷெ கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை உடையார்,
வெத்தீஸ்மேஸ்தர்.

(Mis 694.)


அநேக பரிசுகளும் தங்கமெடல்களும் நற்சாக்ஷிகளும் பெற்று உலகப் பிரசித்தி அடைந்திருப்பதோடு 25-8-23-ல் சென்னையில் நடந்த வைத்திய கான்பரன்ஸ் அண்டிமருந்துக் கண்காட்சியில் இவர் மருந்துக்கள் பஸ்ட்கிளாஸ் (முதல்தர) தேவ ஔஷதங்களெனத் தங்க மெடலும் வைத்தியபதி என்ற பட்டமும் பெற்றவர்.

## குஷ்டரோகிகளே!

நீங்கள் இனி இந்த நரக வேதனையில் அழுந்தாமல் மன உல்லாசமாக இருக்கலாம்.

பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்தரவாதம்.

## நமது தாம்பிர பஸ்பத்தின் மகத்துவம்.

டாக்டர்களால் கைவிடப்பட்ட அநேக குஷ்டரோகிகளை சௌக்கியப் படுத்தி விட்டது.

திமிருடன் உள்ள குஷ்டம், குஷ்டநோய், தடிப்பு, அரிப்பு, கை கால் சுரணையற்று காது, மூக்கு, உதடு, கை கால் சுரணையுள்ள பெருநோய் உள்ளவர்களும் கண்சிவந்து வாய் மூக்கில் நீர்வாடை வீசும் மூக்கு அழுகிய அசாத்திய ரோகமுடையவர்களும் சரீரமே ரணமாகி விரல்கள் அழுகிப்போன ஆறாத புண்களும், வெள்ளை, வெட்டை, மொழிகளில் குலை, வீக்கம், வலி கை கால் குடைச்சல், கிரந்தி, நமைச்சல், மேகஊறல், பத்து, அரிகிரந்தி, தடிப்பும நரம்பு பிடித்து கை காலை முடக்கிவிடும் மேகவியாதிகளும், வெண்மேகம், செம்மேகம், கருமேகம் முதலிய சகலவித கர்ம வியாதிகளுக்கும்,

# நமது தாம்பிர பஸ்பம்.

சாப்பிடுங்கள்.

முப்புவினால் தளுக்கற நீற்றியது; களிம்பற்றது; வாந்தி முதலிய கேடுகள் ஒன்றும் செய்யாது. பத்தியமில்லை. வியாதிகளை விவரமாய் எழுதவும்.

80-வேளை பஸ்பம் ரூபா 40. 40-வேளை பஸ்பம் ரூபா 20.

20-வேளை ரூபா 10 ஏழைகள் என்று எழுதினால் பாதிவிலைக்கு அனுப்பப்படும்.

காந்தி! தேஜஸ்!! பலம்!! தீர்க்காயுள் சந்தானவிர்த்தி,

அடையப் பிரியப்படுகிறீர்களா! அப்படியானால் பழனி, T. R. K.

# தங்கபஸ்பம். சாப்பிடுங்கள் (பஸ்பத்தின் மகிமை).

"முடியாத பற்பமது குன்றியுண்ண முனையான காயமது சிவந்து மின்னும்
பிடியாத மதயானைப் பெலனுக்கொக்கும் …………"

என்ற இக்கவியால் பஸ்பத்தின் பெருமை நன்கு விளங்கும். அபார சக்தி வாய்ந்தது. ஜீரண சக்தி, பசி, ரத்தவிர்த்தி உண்டாக்கும். இந்திரிய விருத்தியும் இந்திரிய புஷ்டியும் கொடுத்து ஊக்கத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின ஔஷதமில்லை.

பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்தரவாதம்.

100-நாள் பஸ்பம் ரூபா 35. 50-நாள் பஸ்பம் ரூபா 20. 25-நாள் பஸ்பம் ரூபா 10., 10நாள் ரூ 5.

## நீரழிவுக்கு ஆப்ரேக் செந்தூரம்.

சால்திபோகும் நீரை நிறுத்தும், தாகத்தைக் குறைக்கும், நீரிலுள்ள சர்க்கரையையும்சரீர வெளுப்பையும் மாற்றி தேஜஸ் பலம் மாகடிக்கும். இதோ ஒருமருந்துக்கும் வசப்படாத வியாதி இந்தமருந்தில் நிருவது வெகு ஆச்சரியமாக இருக்கிறது. இப்படி சிரேஷ்டமான மருந்து இதுவரை வெளிவரவில்லை.

40-நாள் மருந்து ரூ. 20, 20-நாளுக்கு ரூ. 10. அனுமான ஆவரை சிரதம் 80 உருண்டை ரூ. 10.

## தாளக பஸ்பம்.

எவ்வளவு நாட்பட்ட காசம் க்ஷயம், ஈளை, இருமல், ஷ்ட சுவாசம், கோழை, சுபக்கட்டு அவசியம் தீரும். புட்டி ரூபா 4.

## நாக பஸ்பம்.

சீழ் மூலம், ரத்தமூலம், மூலமுளை, மலபந்தம் முதலிய மூலம் ஒன்பதும் வெகு சீக்கிரம் குணமாகும். ஆப்ரேஷன் தேவையில்லை புட்டி ரூபா 4.

## பிரமேக நிவாரணி.

ஒரேவேளையில் உங்கள் கஷ்டத்தை நிவிர்த்தி செய்யும், பொறுக்கமுடியாத வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம் உடனே நிற்கும். புட்டி ரூபா 2.

## இதோ? ரசமணி.

பூசைக்குகந்தது வாசிதம்பிக்கும் சகல வசியம், தனலாபம், சித்தி, காரியசித்தி, தொழிலபிவிருத்தி, புத்திரசந்தானம், மென்மேலும் பெருகும், தொத்துநோய் ஆவிருத்து மேகபற்று, சொறி சிரங்கு முதலியவை தீரும். மணி 1-க்கு ரூபா 2 6-மணி ரூபா 10-0-0.

எந்த மருந்துக்கு ஆர்டர் செய்தாலும் கடிதம் எழுதும்போது விலாசம் நிரேக உருகளைத் தெரிவிக்கவும், பினாங்கு, சிங்கப்பூர்த்தேசவாசிகள் முன்பணம் அனுப்பவும்.

வைத்தியபதி, டி. ஆர். கருப்பணபிள்ளை,
ஆயுள்வேத வைத்தியசாலை, பழனி.

(Q 66 A.)

## கடுங்காற்று.

சென்ற திங்கட்கிழமை ஹுனைவ என்னுமிடத்திலே கடுங்காற்றடித்தது. அங்குள்ள புகையிரத ஸ்தானக் கட்டிடங்களில் வேயப்பட்ட ஓடுகள் பெயர்க்கப்பட்டுத் தூரத்தில் வீசப்பட்டன. ஸ்தானத் தலைவருடைய கந்தோரிலுள்ள கதிரை முதலியனவும் பிரயாணச் சீட்டுகள் வைக்கப்பட்டுள்ள அலுமாரியும் பிறவும் பேர்த்து வீசப்பட்டன.

## உப்பைத் திருடிய தலைமைக்காரன்.

வக்கரவேலியிலே டேவித் அப்பு என்னும் ஒருவருக்குரிய பன்னிரண்டு சாக்கு உப்பை அங்குள்ள பொலிஸ் விதானையும் வேறொருவரும் திருடினமை காரணமாக அவ்விருவர் மீதும் முதலி அதிகாரத்தினால் வழக்குத் தொடரப்பட்டது. எதிரிகள் குற்றவாளிகளாகக் காணப்பட்டுத் தனித்தனி ஐந்து ரூபா அபராதம் அல்லது மூன்று வாரக் கடுஞ்சிறை விதிக்கப்பெற்றனர்.

## சட்டநிருபண சபை.

சட்டநிருபணசபையிலே தெரிவு செய்யப்பட்ட கூட்டம் சென்ற புதன்கிழமை கூடியது. இச்சபை கொழும்பிலே ஒரு தந்தவைத்திய கல்லூரியைத் தாபிப்பதற்கு 120,000 ரூபாவும், லேடி ஹவலக் வைத்தியசாலையில ஓர் சத்திர சிகிச்சா மண்டபம் அமைப்பதற்கு 15,000 ரூபாவும், இலங்கையிலுள்ள வைத்தியசாலைகளிற் கட்டிடத் திருத்தத்தின் பொருட்டு 100,000 ரூபாவும், இலங்கையிலே பத்துப் புதிய சிறு வைத்தியசாலைகள் (டிஸ்ப்பென்சரீஸ்) அமைப்பதற்கு ஒரு லட்ச ரூபாவும் செலவு செய்யத் தீர்மானித்திருக்கிறது. இச்சபை சென்ற வியாழக்கிழமைக் கூட்டத்தில் சில சிறுதெருக்களையும் தோட்டப்பகுதியிலுள்ள சில தெருக்களையும் பகிரங்கவேலைப்பகுதியார் பொறுப்பிலாக்கி அவற்றைத் திருத்துவதற்காக 500,000 செலவிடத் தீர்மானித்திருக்கிறது.

## கச்சேரி முதலியார் குடிகாரனுற் சருவப்பட்டமை.

சென்றதிங்கட்கிழமை மாத்துறையிலே குடிகாரன் ஒருவன் சனங்களுடன் கலகமிட்டான். கச்சேரி முதலியாராகிய மிஸ்டர் டபிள்யு ஏ. அமரசேகரா என்பவர் அவனைப் பிடிக்கும்பொருட்டுப் பொலிசருக்கு அறிவித்தார். பொலிசர் வருவதற்குச் சிறிது தாமதமானமையினுல் முதலியார் தானே நேரிற் சென்று குடிகாரனைப் பிடிக்க முயன்றூர். குடிகாரன் முதலியாரைத் தனக்குச் சமீபத்தில் வரவேண்டாமென எச்சரிக்கையிட்டான். முதலியார் அவனுடைய வார்த்தையைக் கவனியாது சமீபித்து அவனுடைய முகத்திலடித்தார். அவன் தன்கையிலுள்ள கத்தியினுல் முதலியாருடைய வயிற்றிற் குற்றினுன். அப்பொழுது குடிகாரன் அங்கு நின்றோராற் பிடிக்கப்பட்டுச் சிறைப்படுத்தப்பட்டான். முதலியாருக்குக் கடுங்காயமேற்பட்டிருக்கிறது.

## கள்ள நாணகம்.

கொழும்பு முதலிய இடங்களிலே ஐம்பது சதப் போலி நாணகங்கள் அதிகமாக ஊடாடுகின்றனவாம். இவை ஜேர்மன் சில்வர் என்னும் லோகத்தாற்செய்யப்பட்டிருக்கின்றனவென்றும், இவைகளில் 1903-ம் அல்லது 1910-ம் வருடங்கள் இடப்பட்டிருக்கின்றனவென்றும், மந்தமான சத்தத்தையுடையனவாயிருக்கின்றனவென்றும் சொல்லப் படுகின்றது. பொலிஸ்காரர் இந்நாணகம் செய்பவர்களைக் கண்டுபிடிக்க முயர்ச்சிக்கின்றனர். சில காலத்தின் முன்னர், கொழும்பிலே இரண்டு ரூபாப் போலி நோட்டுக்கள் காணப்பட்டன. இது சம்பந்தமாக ஒருவன் பிடிபட்டான். ஆனுல் தக்க சாக்ஷியில்லாமையால் இவன்மீது வழக்குத் தொடரப்படவில்லை. ஆனுல் கண்டுபிடித்த நோட்டுக்களயாவும் அழிக்கப்பட்டன. சில வருடங்களின் முன்னர் புகையிரதப் பகுதியிற்பூச்சுவேலைக்காரனுயிருந்தவனும் கைதேர்ந்த சித்திரவேலைக்காரனுமான ரோசா ஜோன் என்பவன் நூறு ரூபாப் போலி நோட்டுக்களையியற்றி வெளியிட்டமைக்காக, ஏழுவருடச்சிறை விதிக்கப்பட்டான். இவன் சிறையால் மீண்டதும், திரும்பவும் இத்தொழிலிற்சம்பந்தப்பட்டமைக்காக மீண்டும் பதினுன்கு வருடச் சிறைவாசம்பெற்று அங்கேயிறந்துவிட்டான். இவன் போலிநோட்டுகளை எவ்விதயந்திர உதவியுமின்றித் தனதுகையினுலேயே இயற்றியவனும்,

## ஆற்றங்கரையில் நிகழ்ந்த கொலை

சென்ற திங்கட்கிழமை இரவு வெலத்தரையிலே மடுகங்கைக் கரையில் நாமல் அப்பு என்னும் ஒருவன் ஆற்றில் மீன் பிடிக்கச் சென்ற தன்தையின் வரவை எதிர்பார்த்திருந்தான் அப்பொழுது ருக்கா, பாத்தா என்னுமிரு கள்வர் மீனைத் திருடும் பொருட்டு அங்குச் சென்றூர்கள். குறித்த நாமல் அப்புவுக்கும் கள்வரிருவருக்குமிடையிற் கலகமுண்டாயது. ருக்கா என்பவன் நாமல் அப்புவின் முதுகிற் கத்தியினுற் குற்றினுன். படுகாயமுற்ற நாமல் அப்பு வைத்தியசாலைக்குக் கொண்டுபோகப்படும் போது வழியில் உயிர் துறந்தான். ஹல்மல்கொடை என்னுமிடத்துள்ள பொலிஸ் உத்தியோகத்தர் ருக்கா என்பவனைப் பிடித்தனர். பாத்தா என்பவன் ஓடி மறைந்தனன்.

## காசுக்கடைகளின் கலக்கம்.

இந்திய கொழும்பிலுள்ள வங்கிக்காரர் அருணுசலம்செட்டியாரும் வேறு நால்வரும் வாக்குமுறிப்பத்திரம் கொடுத்துப் பெற்றுக்கொண்ட 101,578.08 ரூபாவை அறவிடும்பொருட்டு அங்குள்ள டிஸ்திறிக்கோட்டிலே குறித்த ஐவர்மீதும வழக்குத் தொடர்ந்திருக்கின்றனர். பீ. ஆர். என். எம். சோமசுந்தரம் செட்டியார் ஒருவர் அங்குள்ள அருணுசலம் செட்டியாரிடமும் வேறு மூவரிடமும் 160,531.47 ரூபாவை அறவிடுதற்காக மேற் நால்வர் மீதும் வழக்குத் தொடர்ந்திருக்கின்றனர். எஸ். பீ. எல். எஸ். ஆர். எம். சுப்பிரமணியம் செட்டியார் ஒருவர் அருணுசலம் செட்டியாரிடமும் வேறு மூவரிடமும் 56,928 02 ரூபாவை அறவிடுதற்குக் குறித்த நால்வர் மீதும் வழக்குத் தொடர்ந்திருக்கின்றனர். டெல்மேஜ லோர்க் சமுதாயத்தார் எம். ஏ. ஆர். என். இராமநாதன் செட்டியார் ஒருவர் வாக்குமுறிப்பத்திரம் எழுதிக்கொடுத்துத் தம்மிடம் பெற்றுக்கொண்ட 100,000 ரூபாவை அறவிடுதற்காக மேற் செட்டியார் மீது வழக்குத்தொடர்ந்திருக்கின்றனர். "ஈஸ்ரேண்" வங்கி எம். ஏ. ஆர். என். இராமநாதன் செட்டியார் வாக்குமுறிப்பத்திரம் கொடுத்துப் பெற்றுக்கொண்ட 102,630 ரூபாவை அறவிடுதற்காக வழக்குத் தொடர்ந்திருக்கின்றது. இந்திய 'இம்பீரியல்' வங்கி அருணுசலம் செட்டியார், இராமநாதன் செட்டியார், சுந்தரம்செட்டியார், இலட்சுமணன் செட்டியார் என்னும் நால்வரும் வாக்குமுறிப்பத்திரம் கொடுத்துப் பெற்றுக்கொண்ட 77,797.60 ரூபாவை அறவிடும் பொருட்டுக் குறித்த நால்வர் மீதும் வழக்குத் தொடர்ந்திருக்கின்றது.

## கண்டிச் சுப்பிறீங்கோட்டில் ஓர் விசேஷ சம்பவம்.

சென்ற புதன்கிழமை கண்டிச் சுப்பிறீங்கோட்டிலே ஒரு கூட்டமாகச் சென்று திருடிய கள்வர் பத்துப்பேர் விசாரணை செய்யப்பட்டனர். மிஸ்டர் சீ. டபிள்யூ. டி. அல்விஸ் அவர்கள் துவிபாஷகராகக் கடமை பார்த்தனர். அப்பொழுது யூரிமார் தலைவராகிய மிஸ்டர் ஈ. எவ். மாறியற் என்பவர் நீதிபதியை நோக்கி "எதிரி பக்க நியாயதுரந்தரர் கூறும் வாக்கியங்களைத் துவிபாஷகர் குறித்த சாட்சிக் காரனுக்குச் சரியாக மொழி பெயர்த்துக் கூறவில்லை" என முறையிட்டார். நீதிபதி முதலியாரை நோக்கினுர். முதலியார் தாம் இருபது வருடகாலம் இந்த உத்தியோகத்தைத் திறமையுடன் நடாத்திவருவதாகவும் இதுகாறும் எவரும் இவ்விதமாக முறையிட்டதில்லையெனறும் கூறிச் சிறிது கோபமும் பெரிது மனஸ்தாபமுமடைந்தார் நீதிபதி முதலியார்மீது அக்குற்றத்தைச் சுமத்தாதவர் போல முகக்குறிகாட்டி எதிரிபக்க நியாயதுரந்தரரை நோக்கிக் கேள்விகேட்கும்படி சொன்னுர். இதற்கிடையில் முதலியார் யூரிமார் தலைவர் கூறியமையையிட்டுத் தாம் அதிகம் வருந்துவதாகவும் இப்பொழுது கடமை பார்க்க முடியாதென்றும் கூறி நாற்காலியிலிருந்துவிட்டார் நீதிபதி துவிபாஷகரை நோக்கி "நீர் இப்பொழுது கடமை பார்க்கவேண்டும் அல்லது வேலையினின்று நீங்கிக்கொள்ள வேண்டுமென்று கூறிய பின், வேறொரு துவிபாஷகரை விரைவில் ஒழுங்கு செய்யும்படி முடிப்புற நியாயதுரந்தாருக்குக் கட்டளையிட்டார். யூரிமார் தலைவருடைய செய்கையினுலே தாம் அதிகம் நிலை தளர்ந்துவிட்டதாக முதலியார் பின்னரும் கூறினுர். முடிப்புற நியாயதுரந்தாருடைய கேள்விப்படி முதலியாரை ஐந்து நிமிஷ நேரம் ஆறியிருக்கும்படி உத்தரவு கொடுக்கப்பட்டது. பதினைந்து நிமிஷம் சென்றபின் முதலியார் தமது கடமையைக் கரியேற்றநடத்தினுர்.

## ஆரோக்கிய குடியரசு.

ஆரோக்கிய குடியரசுக்கு விரோதமாகச் சதியாலோசனை செய்தவர்களுட் பதினெருபேர் தூக்கிக்கொல்லப்பட்டார்கள்; எழுவர் நீடித்தகாலத்திற்குச் சிறைவிதிக்கப்பெற்றூர்கள்; பத்தொன்பதுபேர் நிரபராதிகளாகக்காணப்பட்டார்கள்.

## மானநஷ்ட வழக்கு.

பேஜாவர் என்னுமிடத்திலிருந்து வெளிவரும் "மிலாப்" என்னும் தினசரிச் சுதேச பத்திரிகை கப்ரின் எட்வேட்ஸ் என்னும் ஒருவரைப்பற்றி அவதூறுக எழுதினமை காரணமாகக் குறித்த கப்ரின் மேற் பத்திரிகைச் சொந்தக்காரர்மீது 15,000 ரூபாவுக்கு மானநஷ்ட வழக்குத் தொடர்ந்திருக்கின்றனர்.

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்சு பெற்று அடைவு பிடிக்கும திரிகோணமலை 8-ம் நம்பர்க் காசுக்கடைவீதி வெற்றிவேலு கனகசபை என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்சட்டத்தின் 12 ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கவேண்டிய நகைகளின் விபரம்:

| நம். | டெ. | ரூ. | சத. | நகை விபரம், |
|---|---|---|---|---|
| | 1923-ம் ஆடி 12-ம் ௴ | | | |
| 5428 | 27 | 50 | | கம்பிப்பூராணட்டியல் 1 |
| | 1924-ம் ஆடி 1-ம் ௴ | | | |
| 6703 | 18 | 17 | | இமிற் காதோலை சோடி 1 |
| 6706 | 18 | 8 | | வெ. குழற்காப்பு சோடி 1 சு. இ. பழுது |
| 6727 | 18 | 17 | | தோடு சோடி 1 |
| 6745 | 18 | 50 | | கம்பிப்பூராணட்டியல் 1 |
| 6751 | 18 | 7 | | வெ. குழல்காப்பு சோடி 1 |
| 6773 | 19 | 8 | | வெண்மட்டமணி 26 |
| 6785 | 19 | 20 | | மணி 30 |
| 6787 | 19 | 30 | | சவடி முகப்பு 1, மணிக் கோர்வை 2க்குமணி 82 |
| 6789 | 19 | 9 | | சவுக்கமணி 1க்கு மணி 24 ஓ இ |
| 6790 | 19 | 6 | | கொப்புச் சிமிக்கி சோடி 1 |
| 6802 | 19 | 10 | | சவுக்கமணி 1க்கு மணி 13 பழுது |
| 6818 | 19 | 6 | | வளையல தகடு 7 |
| 6861 | 20 | 12 | | தங்கக்காப்பு 1 |
| 6909 | 21 | 6 | 50 | கூடு 1 பழுது |
| 6924 | 21 | 35 | | கம்பிப்பூராணட்டியல் 1 |
| 6951 | 21 | 55 | | கைச்சங்கிலி சோடி 1 முகப்பு இல்லை |
| 7001 | 22 | 6 | | குண்டுவைத்த அரைப் பவுண் 1 |
| 7002 | 22 | 20 | 04 | பொன கொலிசுக்காப்பு சோடி 1 பழுது |
| 7003 | 22 | 10 | | 3 பட்டுமணி 1 பழுது |
| 7006 | 22 | 13 | | சிறுபதப்பின்னைக்கொடி 1 பழுது க. இ. |
| 7068 | 23 | 8 | | வெ. சிறுசுறணை சோடி 2 |
| 7069 | 23 | 6 | | வெ. எஸ் சுறணை சோடி 1 |
| 7130 | 24 | 9 | | வெ. எஸ சுறணை சோடி 1 |
| 7182 | 26 | 12 | | குவளைக்கடுக்கன் சோடி 1 சுரை இல்லை. |
| 7200 | 26 | 50 | | சவடியுடன கொடி 1 |
| 7206 | 26 | [illegible] | 01 | வெ. பாதசரம சோடி 1 |
| 7211 | 26 | [illegible] | | மேலீடு சோடி 1 |
| 7246 | [illegible] | [illegible] | | தங்கக்காப்பு 1 |
| 7262 | 28 | [illegible] | | தோடு சோடி 1 |
| 7353 | 30 | 10 | | பின கோர்க்கி 1 |
| 7368 | 30 | 9 | | தோடு சோடி 1 பழுது |
| 7370 | 30 | 250 | | மணிக்கோர்வை 1-க்கு மணி 31 ரேகபழுவுடன் 5 பட்டு மணிக்கோர். 1 |
| 7434 | 31 | 40 | | பதப்பிறை திருக்கொணை 1-க்கு மணி 53 |
| | 2-ம்௴ | | | |
| 7455 | 1 | 18 | | கைச்சங்கிலி 1 |
| 7461 | 1 | 8 | | வெ. குழல்காப்பு சோடி 1, வெ. சிறு அரைஞாண் கொடி சு. இ. வெ. கால் மோதிரம் 6 |
| 7462 | 1 | 12 | | மோதிரம் 1 |
| 7479 | 2 | 6 | | கூடு 2 கல் 2 இல்லை |
| 7481 | 2 | 32 | | தாலிக்கொடி 1 |
| 7492 | 2 | 7 | | வளையல் 6 |
| 7533 | 3 | 12 | | வளையல் 8 |
| 7568 | 4 | 6 | | சிமிக்கி சோடி 1 |
| 7604 | 4 | 80 | | சிங்கமுகக் கொலிசுக்காப்பு சோடி 1 |
| 7607 | 4 | 10 | 04 | செருகுதோடு சோடி 1 |
| 7651 | 5 | 20 | | வெ. பாதசரம் சோடி 1 சுரை இல்லை |
| 7721 | 7 | 17 | | வெள்மட்டமணி 1-க்கு மணி 36 |
| 7743 | 7 | 12 | | தங்கப்பவுண் 1 |
| 7800 | 9 | 6 | | பொத்தான் 3 |
| 7837 | 9 | 7 | | மோதிரம் 1 |
| 7863 | 10 | 23 | | வெ. பாதசரம் சோடி 1 |
| 7873 | 10 | 28 | | பத. சவுக்கமணி 1-க்கு மணி 23 |
| 7876 | 10 | 12 | | வெ. கொலிசு சோடி 1 பழுது |
| 7889 | 10 | 15 | | பீலிக்காப்பு 1 கல் இல்லை |
| 7907 | 11 | 100 | | கம்பிப்பூராணட்டியல் 1, வெ. பாதசரம் சோடி 1 |
| 7954 | 13 | 25 | | சிகப்புக்கடுக்கன் சோடி 1 |
| 7986 | 13 | 22 | | வெ. பாதசரம் சோடி 1 |
| 7990 | 13 | 8 | | இடைகுரி 12 |
| 7994 | 13 | 9 | | வெ. எஸ் சுறணை சோடி 1 |
| 8006 | 14 | 50 | | கம்பிப்பூராணட்டியல் 1 |
| 8027 | 14 | 15 | | கைச்சங்கிலி 1 கல் இல்லை |
| 8062 | 15 | 12 | 40 | தோடு சோடி 1, கூடு 1 |
| 8103 | 16 | 20 | | இமிற் காதோலை சோடி 1 |
| 8137 | 16 | 13 | | ஒட்டுவளையல் 7 பழுது |
| 8146 | 17 | 13 | | இமிற் கடுக்கன் சோடி 1 சு. இ. |
| 8170 | 17 | 15 | | வெ. எஸ் சுறணை சோடி 1 |
| 8216 | 18 | 12 | | வளையல்8 பூ1இல்லை பழுது |
| 8292 | 20 | 10 | | படக்கூர் 1 |
| 8330 | 21 | 23 | | வெ. பாதசரம் சோடி 1 சு. ஒன்று இல்லை |
| 8331 | 21 | 6 | | வெ. குழல்காப்பு சோடி 1 |
| 8351 | 21 | 10 | | கற் தோடு சோடி 1 |

| நம். | டெ. | ரூ. | சத. | நகை விபரம், |
|---|---|---|---|---|
| 8367 | 22 | 6 | | வெ குழல்காப்பு சோடி 1 |
| 8415 | 23 | 20 | 04 | வெ. பாதசரம் சோடி 1 |
| 8447 | 24 | 11 | | பொன் கொப்பு சிமிக்கி தோடு முறையே சோடி 1 சு. 1 வெள்ளி |
| 8491 | 26 | 24 | | வெ. பாதசரம் சோடி 1 |
| 8511 | 26 | 9 | | வெ. அரைஞாண் 1, கற் படக்கூர் 1 பழுது |
| 8538 | 27 | 6 | | பதக்கம் 1 |
| 8549 | 27 | 6 | | சிறு திருகு பூ 1 |
| 8571 | 28 | 18 | | கொப்பு சிமிக்கி சோடி 2, வெ. சுறணை சோடி 1 |
| 8579 | 28 | 11 | | இமிற். சிகப்பு கடுக்கன் சோடி 1 சு. இ. |
| 8581 | 28 | 10 | | சிறுசெருகுதோடு சோடி1, டிம்பியுடன் பதக்கம் 1 பழுது |
| | 3-ம்௴ | | | |
| 8654 | 1 | 6 | | கொப்பு சிமிக்கி சோடி 1 பழுது |
| 8706 | 3 | 23 | | தாலித்தட்டு 1-க்கு தட்டு 8 குடம் 1 பழுது |
| 8805 | 6 | 12 | | படக்கூர் 1 |
| 8809 | 6 | 30 | | தாலிக் கொடி 1 பழுது |
| 8810 | 6 | 50 | | சிங்கமுகக்காப்பு சோடி 1 |
| 8824 | 7 | 300 | | தங்கப்பவுண் 4 உடன் சவுடிக்கொடி 1 |
| 8827 | 7 | 100 | | 5 பட்டிலை மாலை 1 |
| 8852 | 8 | 10 | | மேலீடு சோடி 1 |
| 8886 | 9 | 25 | | காதோலை சோடி 1 |
| 8909 | 10 | 100 | | மணிக்கோர்வை 1-க்கு மணி 37 |
| 8911 | 10 | 8 | | தோடு சோடி 1, வெ. 2பட்டரைஞாண் |
| 8958 | 11 | 13 | | தோடு சோடி 1 க. சு. இ., வெ. எஸ்சுறணைசோடி1 |
| 8968 | 11 | 50 | 04 | தட்டுமுறுக்கு கூட்டம் 1 |
| 9025 | 13 | 16 | | வெ. பாதசரம் சோடி 1 |
| 9028 | 13 | 15 | | நாட்டுவாளி சோடி 1, வெ. சிறு பாதசரம் சோடி 1 |
| 9029 | 13 | 25 | | மணிக்கோர்வை 1-க்கு மணி 38 |
| 9036 | 13 | 6 | | படக்கூர் 1 |
| 9057 | 14 | 18 | | சிகப்புக்கடுக்கன் சோடி 1 சுரை இல்லை |
| 9091 | 15 | 30 | 04 | பொன தாலிக்கொடி 1 |
| 9108 | 16 | 25 | | முத்துக் காதோலைசோடி1 |
| 9125 | 17 | 30 | | தாலிககொடி 1 சு. இ. |
| 9137 | 17 | 30 | | தாலிக்கொடி 1 பழுது |
| 9160 | 17 | 55 | | கம்பிப்பூராணட்டியல 1 |
| 9171 | 17 | 6 | | மெ. குவளை சோடி 1 சு. ஒன்று இல்லை |
| 9209 | 19 | 80 | | ஒப்பின காப்பு சோடி 1 கல் 3 இல்லை |
| 9222 | 19 | 6 | | கொப்பு சிமிக்கி சோடி 1 |
| 9267 | 21 | 7 | | வளையல் 2 |
| 9323 | 23 | 65 | | பீலிக்காப்பு சோடி 1 |
| 9324 | 23 | 62 | 50 | கொலிசுக்காப்பு சோடி 1 |
| 9336 | 23 | 6 | | சிறு திருகு பூ 1 |
| 9371 | 24 | 10 | | பவுண் முறுக்கு காப்பு 1 |
| 9374 | 24 | 48 | | மணிக்கோர்வை 1-க்கு மணி 35 |
| 9375 | 24 | 6 | | மோதிரம் 1 |
| 9397 | 25 | 48 | | தாலிக்கொடி 1 பழுது |
| 9423 | 25 | 30 | 20 | அரைப்பவுண 2 உடன் பத. பின்னைக்கொடி 1 குண்டொன்றில்லை |
| 9441 | 26 | 12 | | குவளைக்கடுக்கன சோடி 1 |
| 9496 | 28 | 13 | | தங்கக்காப்பு சோடி 1 |
| 9498 | 28 | 16 | | சவுக்கமணி 1-க்கு மணி 24 |
| 9538 | 29 | 10 | | கொப்பு சிமிக்கி சோடி 1 |
| 9600 | 31 | 60 | | தாலிக்கொடி 1 |
| 9624 | 31 | 30 | | சறடு 1 |
| | 4-ம்௴ | | | |
| 9667 | 2 | 250 | | தாலிக்கொடி 1 |
| 9668 | 2 | 250 | | பிரஞ்சு 1க்கீழ் 5 பவுண் 45 கோர்த்த மாலை 1, ஒருபட்டுச்சங்கிலி 1 |
| 9676 | 2 | 14 | | தோடு சோடி 1 சு. இ. |
| 9678 | 2 | 50 | 65 | கம்பிப்பூராணட்டியல் 1 பழுது |
| 9693 | 2 | 12 | | வெ. குழல்காப்புசோடி 1, சவடிமுகப்புடன் மணி 27. |
| 9724 | 3 | 15 | 04 | பவுணகாப்பு சோடி 1 |
| 9775 | 5 | 6 | | வெ. குழல்காப்பு சோடி 1 பழுது |
| 9787 | 6 | 10 | | கொப்பு சிமிக்கி சோடி 1, சிறு திருகு பூ 1 |
| 9803 | 6 | 15 | | பத. சவுக்கமணி 1-க்கு மணி 22 மூடி |
| 9868 | 9 | 13 | | சவடிமுகப்பு 1 |
| 9934 | 10 | 14 | | வெ பழைய கொலிசு 2 |
| 9937 | 10 | 7 | 50 | வெ. பழையசுறணை சோடி1 |
| 9938 | 10 | 20 | | பெல்ற் காப்பு 1 சு. இ. |

விற்பனவு:—1925-ம் ஆடு ஆவணி ௴ 25-ந் திகதிக்குச்சரியான செப்டெம்பர் ௴ (9-9-25) புதன்கிழமை காலை 8 மணி தொடக்கம் எடுபட்ட நகைகள் பிறகோலாக பிரசித்த ஏலத்தில் மேற்படி கடையில் விற்கப்படும்.

க. கதிர்காமத்தம்பி,
லெர்கின் ரேஸ்தர்,

(Mie 698)

திரம், அக்காலத்தை நாகரிகம் உடையதென்று முற்றும் கொள்ளுதல் கூடாது. நூதனயந்திரங்களிலும், காலத்துக்குத் தக்கவிதமாகத் தங்கள் கோலங்களை மனிதர் அமைத்துக்கொள்வதிலும் மாத்திரம் நாகரிகம் தங்கியிருக்கவில்லை.

அன்றியும், மேனாட்டுச் சிற்ப நிபுணர்களையும் திகைக்கச் செய்வனவாய், அற்புதமான வேலைப்பாடுகள் அமைந்தனவாயுள்ள நமது ஆலயங்கள் அக்கால மனிதரின் மதிநுட்பத்தையும் நாகரிகத்தையும் இன்றும் விளக்கிக்கொண்டிருக்கின்றன. அநுராஜபுரத்திலே அழிவுற்றுக்கிடக்கும் செப்பாலயத்தை வியவாத மக்கள் இன்றும் இல்லை. மேனாட்டவரால் கண்டுபிடிக்கப்பட்டுவரும் நூதன யந்திரங்களிலும் பார்க்கப் பன்மடங்கு நுட்பமுள்ளவை அக்காலத்திலே மதுரை காவிரிப்பூம்பட்டினம் முதலிய இடங்களிலே இருந்தனவாகப் பண்டைய நூல்கள் பகருகின்றன. அக்காலத்திலும் அழகிய மாளிகைகள் பட்டினங்களை அணிபெறச் செய்தன. சஞ்சாரத்திற்கு வீதிகள் இருந்தன. வாகனங்களும் வண்டிகளும் இருந்தன. நந்தனவனங்களும் சோலைகளும் மக்களுக்கு இதத்தை விளைத்தன. ஆயிரக்கணக்கான மைல்களுக்குக் கப்பல்கள் பாய்விரித்தோடின. அவைகளின் வசதியின் பொருட்டு ஆங்காங்கே தீபதம்பங்கள் திகழ்ந்தன. ஸ்நானவேளைகளில் வாசனைப்பொடிகளும் பிறவும் உபயோகிக்கப்பட்டன. தாகத்துக்குச் சிறந்த பானவகைகள் இருந்தன. ஆனால், அவை இக்காலத்துப் போலிப் பொருட்கள்போலமாத்திரம் இருக்கவில்லை சுருக்கமாகக் கூறுமிடத்து, இக்காலத்திலே நமது பழக்கவழக்கங்களிலே என்னவகையான திருத்தங்களைச் செய்து கொள்ள முயலுகின்றோமோ, அவைகளிலும் பன்மடங்கு சீர்திருத்தங்கள் அக்காலத்தும் இருந்தன. ஆனால் அவை போலித் திருத்தங்களாக இருக்கவில்லை.

பெண்களின் ஆடை ஆபரணங்களில், பொன்னும் மணியும் புனைந்து இழைத்த பட்டுகளும், காஞ்சனமாலை, இரத்தினமாலை, முத்தாரம்முதலிய அணிகளும் இருந்தன. கல்வியோ, அவர்களுக்கு மதவுணர்ச்சியையும், செம்மைநெறியையும் விருத்தி செய்து அவர்களின் இயற்கை அழகை மணங்கமழச்செய்தது. மகாவித்துவச் செய்தமாதர்களும், ஆங்கிலநாட்டிலேபுலமை மணம் வீசுவதற்கு ஆயிரத்துக்கு மேற்பட்ட வருடங்களின் முந்தியே கவிதை மாலைகள் செய்த அருங்கலைச் செல்விகளும், நீதிகோடாது புவிபுரந்த அரசிகளும் அக்காலத்தில் இருந்தார்கள். இக்காலத்திலே, தந்தியில்லாது யந்திர உதவி மாத்திரம் கொண்டு பல ஆயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள செய்திகளையும் அறியும் விவேகிகளுண்டு. அக்காலத்திலோ எவ்வித உபகரணமுமின்றிப் பல ஆயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள நிகழ்ச்சிகளையும், வருங்காலச் சம்பவங்களையும் அறியும் உந்நத சக்தி வாய்ந்தோருண்டு. விமானத்தின் உதவி கொண்டு ஆகாயத்திற் பறக்கும் அதிவிவேகிகள் இப்போது உண்டு. எவ்வித உபகரணமுமின்றித் தாமாகவே "கருமுகிற்படலத்தைக் கனைத்துப்"பறந்த அற்புத சக்தி வாய்ந்தோர் அக்காலத்து உண்டு. காலந்தோறும் ஐரோப்பியராற் கண்டுபிடிக்கப்பட்டுவரும் நூதனப் பொருள்களுக்கும், நமது நாடுகளிலிருந்து சூறையாடப்பட்ட சாஸ்திரங்களே காரணமென்பது கற்றறிந்தோர் கருத்தாம்.

ஆனால், இக்காலத்தில் உள்ள வர்கள் திரைகடலோடியும் திரவியம் தேடிப் போதினும், அந்நியநாட்டுப் பொருள்களுக்குத் தங்கள் பணத்தை வாரிவாரி யிறைத்தபோதிலும், மேனாட்டு நாகரீகமோகத்திலேயே மூழ்கியிட்டபோதிலும், அக்காலத்து மக்களிடத்திருந்த உண்மையான நாகரீகம் ஒன்றைமாத்திரம் என்றுந்தோறும் அவர்களிடத்தில் நமக்கு அளவற்ற ஆர்வமும் அபிமானமுமே உண்டுபடுகின்றன. ஏன்? அவர்கள் தங்கள் உணவுக்கும் உடைக்கும் பிறநாட்டவரை எதிர்பார்த்துக்கொண்டிருக்கவில்லை. அவர்கள் இலங்கையடங்கலும் தானியங்களை விருத்தி செய்தார்கள். தங்கள் உபயோகத்துக்கும் [illegible] அவற்றை வேற்றுநாடுகளுக்கும் அனுப்பினார்கள். வேற்றுநாட்டவரின் பசியைநீக்கி, அவர்களின் மானத்தைக் காப்பாற்றினார்கள். இலங்கை "கீழைத்தேசங்களின் தானியசாலை" என்னும் சிறந்த பட்டம் பெறுவதற்குக் காரணபூதரானார்கள். இலங்கை முழுவதும் வேண்டிய பொருட்களை விருத்தி செய்து தம்மைப் போலவே பிறரையும் காப்பாற்றிய தமது தாய்நாட்டிற்கும் பொன்றாப் புகழை நிறுவிய அக்காலமக்களின் செய்கையா தமது முன்னோருக்கு இட்டுக் கற்பித்த[illegible]

## கால நிலை.

வெய்யிலதிகம். பல நாட்களாக மழை பெய்யாமையினால் ஊரிலே பலவகையான நோய்கள் பரம்பியிருக்கின்றன. சமக்காரர் விதைமழையை எதிர்பார்த்தவண்ணமிருக்கின்றனர்.

## புலோலி தெற்கு உபய கதிர்காம மணவாளக்கோலம்.

புலோலி தெற்கிற் கோயில்கொண்டருளும் கண்முகப்பெருமானுக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெற்ற தினமாகிய இந்த ஆவணியீ 11உ (26—8—25) புதன்கிழமைபகல் விசேட அபிஷேகமும் அன்றிரவு விசேஷ உற்சவமும் சிறப்பாக நடைபெறும்.

## சற்பிரசங்கம்.

சென்ற திங்கட்கிழமை நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலையில் சச்சிதானந்த ராஜயோகிகள் "முருகன் பெருமை" என்னும் விஷயமாக ஓர் சற்பிரசங்கஞ் செய்தார்கள். அதன்பின் மன்னார் குடி இராசசுவாமிகள் தாம் மன்னார் குடியிலிருந்து புறப்பட்டுக் கதிர்காமயாத்திரை செய்தமையைப்பற்றி அரிய கீர்த்தனைகளுடன் பிரசங்கஞ் செய்தார்கள்.

## மாட்டுவண்டி அபாயம்.

சென்றவாரம் காரைநகரிலே சோமு, முருகேசு என்னும் இருவர் தங்கள் வண்டிகளை ஒன்றோடொன்றுசவாரிசெய்தனர். அப்போது இவ்வண்டிகளிலொன்று வேலாயுதர் கந்தர் என்னும் ஓர் வயோதிபனைத் தட்டிவிழுத்தி நெரித்துவிட்டது. இதுகாரணமாக அக்கிழவன் உடனே இறந்துவிட்டான். வண்டிக்காரர்மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கின்றது.

## சுதுமலை மாணவ தேர்ச்சிச் சபை

சுதுமலை மாணவ தேர்ச்சிச் சபையின் இரண்டாவது வருடாந்தக் கூட்டம் சென்ற ஆடிமீ 23உ (7—8—25) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் சுதுமலை 'சின்மய பாரதி கலாசாலை'யில் நடைபெற்றது அத்தருணம் விக்ரோறியாக் கல்லூரித் தலைமை ஆசிரியர் திரு. அ. சிவபாதசுந்தரம் பி. ஏ அவர்கள் சபைத் தலைமை வகித்தனர். —கடிதம்.

## அன்னதானம்.

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் உற்சவ தினங்களாகிய இருபத்தைந்து நாட்களிலும் கோயிலின்மேற்கு வீதியிலுள்ள ஸ்ரீ மழுகந்தம்பி அவர்களது திருமடத்தில், கயிலாசபிள்ளையார் கோவிலடி பிரபல வர்த்தகராகிய ஸ்ரீ விசுவலிங்கமவர்களால் அங்குச் சென்ற அடியார்களுக்கெல்லாம அன்னதானம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இத்திருத்தொண்டு என்றும் சிறப்புற நடைபெறும் வண்ணம் சிவசுப்பிரமணியப் பெருமான் திருவருள் பாலிப்பாராக.

## புகைரதத்தால் மாண்டமை.

சென்ற வியாழக்கிழமை காலை பம்பலப்பிட்டிப் புகைரதஸ்தானத்திலே பெருமாள் என்னும் ஓர் யாழ்ப்பாணத்து இளைஞர்புகைரதத்தால் மோதுண்டு கொழும்புப் பெரிய வைத்தியசாலைக்குக் கொண்டுபோகப்பட்டு அங்கு இறந்துவிட்டனரென்று அறியவருகின்றேம். புகைரதப் பாதைக்கு மேலாக இடப்பட்டிருக்கும் படிவரிசைகளாற் சென்று புகைரதத்திலேறுவதற்குப் பதிலாக இவர் புகைரதப் பாதையைக் கடந்து சென்றனரென்றும், அச்சமயத்தில் அங்குவந்த புகைரதம் இவரை இடறிவிட்டதென்றுந்தெரியவருகின்றது. இவர் பம்பலப்பிட்டிப் புகைரத உத்தியோகத்தர் ஒருவரின் சகோதரராம்.

விட்டுத் தமது ஊண், உடைக்குத்தானும் பிறநாட்டவரையே எதிர்பார்த்திருக்கும் இக்கால மக்கள் செய்கையா நாகரீகம் உடையது என்பதுவே இங்கு சிந்திக்கத்தக்கதாம்.

இலங்கைக்கு வேண்டிய ஊண் உடைப் பொருட்களை, இலங்கையிலேயே விருத்தி செய்தலிலேயே [illegible] என்னும் உண்மையான நாகரீகத்தங்கியிருக்கின்றது [illegible] பல [illegible] அறிவோர், ஆனால் இந்த உண்மைநாகரீகம் என்னும் திலமணியை மடிமை என்னும் மங்குற்படலம் மறைத்திருக்கின்றது. [illegible] இந்த உண்மை நாகரீகம் [illegible] ஒளிவிடுமென்பது [illegible] வேண்டும். [illegible] உறுதி; [illegible] ஆக்கம்; [illegible] உயர்ச்சி தருவதாம்.

## நூல்களைப்பற்றிய குறிப்பு.

### முருகன் பெருமை.

இந்நூல் வெள்ளவத்தை திருக்குறட் பயிற்சிக் கழகத்தாரால் பல பிரதிகளிலிருந்து திரட்டிப் பதிப்பிக்கப்பெற்றது. இதன்கண் குமரக்கடவுள் அருணகிரிநாதருக்கு ஞானோபதேசஞ் செய்தமையைக் காட்டும் ஒரு அழகிய படமும் திருப்புகழும், "முருகன்" என்னும்விஷயமாகத் திரு. வி. கலியாண சுந்தரமுதலியார் எழுதிய வியாசமும் ஸ்ரீ மா. சிவராமலிங்கபிள்ளையவர்களால் இயற்றப்பெற்ற நல்லைக்கந்தரந்தாதியும் சேர்க்கப்பட்டுள்ளன. பிரதி ஒன்றன்விலை சதம் 25. பிரதிகள் மேற்படி கழகத்தாரிடம் பெறற்பாலன.

## கிள்ளான் சுப்பிரமணிய சுவாமி திருவூஞ்சல்.

இது தொடுவாயிராச்சியப் பகுதியைச் சேர்ந்த கிள்ளானிலே தெலுக்பளை வீதியிற் கோயில் கொண்டருளிய சிவசுப்பிரமணியப் பெருமான் மீது யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை வித்துவான் ஸ்ரீ மு. ஆறுமுகம்பிள்ளையவர்களால் இயறறப்பட்டு அக் கோவில் தருமபரிபாலன சபையாரால் அச்சிடப்பெற்றது. பத்து ஊஞ்சற் பாக்களையுடையது. எமக்கனுப்பிய பிரதிகளை உவந்தேற்றும்.

## கடிதம்.

### சற்போதமஞ்சரி.

(வண்ணை நகர்
ஸ்ரீ க. வைத்தியலிங்கபிள்ளை
எழுதியது.)

ஐக்கியத்தின் மகத்துவம்

மலரயன் படைத்த மாநில மீது
வந்தவ தரித்த மாந்தரே கேண்மின்!
ஐக்கிய மென்னு மழகிய நற்குணம்
இல்லா அரசுசெறி நகரமென் றனும்
வளப்பெலா மிழந்து மாற்றலர் கையிற்
சிக்கியத் தேயச் செல்வ மனைத்தையும்
அன்னர் சூறை யாடிட அங்கே
வசிந்தா ரெவரும் வறுமைப் பிணியால்
அலக்கணுற் றென்று மழுங்குவ ரன்றே!
ஒற்றுமை யென்னு முலவாப் பெருங்குணம்
எந்தச் சாதியா ரிடத்தி லமையுமோ
அவர்களே 'மலையில் அமைந்ததீ பம்போல்'
ஓதக் கடல்சூழ் உலகந் துதிக்க
எல்லா நலனு மெய்திவாழ் குவரே
நன்மயி ரொத்த பலநா ஸிழைகள்
திடமுட னொன்றாய்ச் சேர்ந்துந் திரிந்தால்
வலிமை சேர் மும்மத வாரணந் தனையுங்
கந்திற் பிணிக்குங் கயிறு தும்மே!
"அடம்பங் கொடியுந் திரண்டால் மிடுக்கெண"
மேலோ ரென்றும் விளம்புவ ரன்றே?
ஐக்கியப் பட்டால் அசிலழ மாளலாம்
ஐக்கியப் பட்டாற் பகைவரு மஞ்சுவர்
ஐக்கியப் பட்டால் அநீதி யிட்டலாம்
ஐக்கியப் பட்டா லாகாத தில்லையே!
அமெரிக் காவும் அறிவின்மேம் பட்ட
ஜப்பான் தேசமு மிதற்குச் சான்றே
இங்ஙன மைக்கிய மெய்திய சாதியார்
மேனிலை யெய்தி விளங்குவ துணர்ந்தும்
பாரத மாதா பதத்திற் பொருந்திய
தளைதனை நீக்கித் தன்னிட்ட மான
சுதந்தர மளிக்கத் தோன்றிய புதல்வர்
மிதவா திகளும் அமிதவா திகளு
மென இரு பிரிவா யிகல்விளைத் திட்டும்
பிராமணர் பிராமண ரல்லா தாரும்
ஒருவரோ டொருவ நடத்தி மலைந்தும்
இந்து முஸ்லி மிருவகுப் பினருங்
கோவதைக் காகக் கொடுஞ்சமர் புரிந்தும்
சட்ட சபைக்குட் புகுதலும் புகுதா
திருந்தலு மென்ன எதிர்வா திட்டும்
எதமி லெளிய குலத்தவர் தங்களைத்
தீண்டவே கிலேயெனச் சித்திர வதைபோல்
வன்கண்மை யாக நடத்தி வருதலும்
இறைமுத லாக வெண்ணில வாகிய
சாதித் துவேஷஞ் சமயத் துவேஷம்
ஆகிய செயல்களி லிடுபட் டனுதினம்
உட்கல கங்களை விளைத்திட லுசிதமோ?
துணைமிலா உங்கள் ஐக்கியக் குறைவையுங்
கோழைத் தனத்தையுங் குறிப்பிற லுணர்ந்து
பிடுபெற் றேங்கு பிரபுக்கள் சபையில்
இந்தியா மந்திரி இயம்பிய வார்த்தையைக்
கேட்டபி னும்பகை மூட்டிட லாமோ?
இன்னும் நன்றிசீர்! இயம்புவன் கேண்மின்!
இலகு "நெல் லிக்காய் மூடைபோ" லிராமல்
அகில இந்தியா உறுநபவ ரனைவரும்
"ஒருதாய் பெற்ற பிள்ளைக ளோசக"
ஐக்கியப் பட்டு அன்புறு மகாத்மா
காந்தியின் வலது காம்போல் விளங்கிய
சித்த ரஞ்சன தாசர்செய் ததுபோல்
உடல்பொ ருளாவி மூன்றையு முலகக்
கர்ப்பணஞ் செய்மின்! அருங்கத ராடை
உடுமின்! காந்தி முரைகளை யலட்சியஞ்
செய்யா தவரின் திருமொழிப் படியே
ஒழுகுமின்! அலைவ்றை யோம்பியேந் நாளும்
ஐக்கியப் பட்டு யாவரு முழைத்தால்
எண்ணிய படியே யாவையு மெய்திச்
செப்பிய சுதந்தரம் பெறுவது திண்ணமே.

## யாழ்ப்பாண ஐக்கியவியாபாரசங்கம்

இச்சங்கத்தின் ஏழாம் வருஷாந்தக்கூட்டம் 1925ஆ ஆவணிமீ 29உ சனிக்கிழமை பிற்பகல் 4 மணிவரையில் மேற்படி சங்க "மகாமண்டபத்தில்" நடைபெறும். அத்தருணம் 1925ஆ ஆனிமீ 30உ முடியவுள்ள வருஷாந்தக்கணக்கும், திருவாகார்த்தர்களின் அறிக்கைப் பத்திரமும் அங்கீகரிக்கப்படும். வேறும் சங்கத்திற்கு ஆகவேண்டிய விஷயங்களும் ஆலோசித்துத் தீர்மானிக்கப்படும்.

18-8-25. — க. ஆறுமுகம்பிள்ளை, காரியதரிசி
(Mis 697)

## ரூபா 50 இனம்.

எனது வளப்புப்பிள்ளை கிருஷ்ணன் அல்லது தம்புவைப்பற்றிய விபரம் எனக்கு அல்லது பராபரிப்புக்காரர் யாழ்ப்பாணம் வண்மேற்கு ஓட்டுமடத்தடி இ பொன்னம்பலமவர்கட்கு தெரிவிப்பவருக்கு 50 ரூபா இனம் கொடுக்கப்படும்.

விபரம்:—உயரம் 3½ அடிவரையில், சிவலை, மொட்டந்தலை, நெற்றியில் பச்சை, வயது 12.

மேமீ 25-ந் திகதி யாரோ எனது சகோதரர் வீட்டைக்காட்டும்படி கேட்டு ஏயாற்றக் கூட்டிக்கொண்டுபோய் விட்டார்.

சி. கந்தவனம்
கெட் ஓவர்சியர்,
(Mis 691.) செறம்பான. F. M. S.

## இனம் காலண்டர் இனம்.

எங்களிடம் கட்டி வெள்ளியிலும் 1-ம் நெ. 2-ம் நெ வெள்ளியிலும் மிச்சம் துப்புரவாக வேலைமுடித்த முரசுகுத்தி கெங்காதரக்கொடி கைகோர்வை,முகப்புக்கொடி,காஞ்சி அரைஞாண்கொடி, கால்தண்டை, கொலுசு,வகைகளும் கடயம கங்கணம், மயிர்மாட்டி, ஒட்டியாணமும், இமிடேசன் செரப்பு கம்மல் தோடு கடுக்கன் மோதிரங்கள் இன்னும் இதரவெள்ளி தங்க நகைகளும் பட்டுபருத்திமுதலிய ஜவுளித் திறுசுகளும் விலைகள் சகாயம். விலாசம் தெரிவித்தால் பிகரஸ்லீஸ்டு அனுப்புகிறோம். சுபம்.

தோ. வே சென்னிசெட்டி &சன்ஸ்
சராப். ஜவுளி வியாபாரம்
(H. 41.) குகை, சேலம், தென்இந்தியா.

## இனம்! காலண்டர் இனம்!!

எங்கள் கம்பெனியில் கட்டி வெள்ளிச் சாமான்களும், நெ. 1-ம், நெ 2-ம் வெள்ளியாலும் மிச்சம் துப்புரவாக வேலை செய்த முரசு குத்தி கெங்காதரக் கொடி, கைக்கோர்வை முகப்புக் கொடி, காஞ்சிக் கொடி, கால தண்டை, செயின்கொலுசு, இன்னும் காலிற் போடும் சாமான்களும், மயிர்மாட்டி, கடயம், ஒட்டியாணம் மோதிரம், புதுச்சிகப்புக் கம்மல், தோடு, கடுக்கன், சீமை வயிரக்கம்பி சட்டங்கள், ஜவுளி பட்டும் பருத்தியும் கலந்த சேலை, சோமன், இன்னும் வேண்டிய சாமான்களும் இருக்கின்றன. தாங்கள் விலாசம் தெரிவித்தால் கிரயஜாபிதா அனுப்புகிறோம்.

நா. பிளே செட்டி அன கோ.,
சருப் ஜவுளி வியாபாரம்,
குகை, சேலம்,
தென் இந்தியா.

(H. 39.)

## விளம்பரம்.

கீழே குறிக்கப்பட்ட மரங்கள் பிரசித்த ஏலத்தில் யாழ்ப்பாணம், காட்டேசண்டுத் துரையவர்களால் பின்னால் சொல்லப்படுமிடங்களில் விற்கப்படும்.

(A) மாங்குளம் மரக்காலையில் இவ்வாண்டு ஆவணி மாதம 26-ந் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு விற்கப்படும் மரங்கள்.
50 பாலை மரங்கள்.

(B) கிளிநொச்சி மரக்காலையில் இவ்வாண்டு ஆவணி மாதம் 27-ம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு விற்கப்படும் மரங்கள்.
50 பாலைமரங்கள்.
20 முதிரை மரங்கள்.

(C) யாழ்ப்பாணம் விறகுகாலையில் இவ்வாண்டு (i) புரட்டாதி மாசம் 1-ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு விற்கப்படும் மரங்கள்.
75 பாலைமரங்கள்.

(ii) புரட்டாதி மாசம் 2-ம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு விற்கப்படும்மரங்கள்
50 பாலைமரங்கள்.
25 முதிரை மரங்கள்.

(D) காங்கேயன்துறை மரக்காலையில் இவ்வாண்டு புரட்டாதி மாசம் 8-ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு விற்கப்படும் மரங்கள்.
50 முதிரை மரங்கள்.
50 தந்திக்கம்பி மரங்கள்.

(Sgd) R. M. White.
கண்டி வனபரிபாலனர்,
காட்டுக்கந்தோர்
ஆவணிமீ 11உ 1925.
(G 540)

## அஷ்டபந்தனமருந்து.

இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட சுத்தமான சரக்குகளைக் கொண்டு செம்மையாகச் செய்யப்பட்ட (சுவாமிக்குச் சாத்தும்) அஷ்டபந்தனமருந்து எம்மிடத்தில் விலைக்கிருக்கிறது.

ரூத்தல் ஒன்றின் விலை ரூபா 5.

ச. வைத்தியநாதக்குருக்கள்,
சிவன்கோவில்,
வண்ணார்பண்ணை.

(M. 37)

---

## தேக்கமரம்.

புதிதாக வருவிக்கப்பெற்ற திறமான தேக்கமரங்கள். நீளம் 6 அடிதொடக்கம் 30 அடி வரையிலுள்ளன. கனம் 10 அங்குலம் தொடக்கம் 20 அங்குலம்வரையிலுள்ளன. நீண்ட மரங்கள் குறைவாயிருப்பதினால், எம்மிடம் வழக்கமாயெடுப்பவர்கள் தங்கள் ஆடர்களை ஏற்கனவே செய்துகொள்ளவேண்டியது.

S. வீரகத்திப்பிள்ளை,
தொண்டமானாறு,

தந்திவிலாசம்
நா பி. வல்லுவெட்டித்துறை.

(H. 37.)

---

## "சேலம் பனியன்கள்."

உறுதியானது விலைசரசம்.
நாட்பட உழைக்கக்கூடியது,
வியாபாரிகளுக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும்.
தேவைக்கு அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

ரூயல் நிட்டிங் பேக்டரி,
செவ்வாய்பேட்டை, சேலம்.
S. இந்தியா.

(H. 40)

---

## சேலம் ஜவுளிதினிசுகள்.

எங்களிடம் சொந்தத் தறிகளில் செய்யப்பட்ட பட்டுத்தினிசுகளும், பட்டும் பருத்தியும் கலந்த தினிசுகளும், தாளம்பூக்கரைப் புடைவைகளும், வெள்ளை ஜவுளி தினிசுகள், குண்டஞ்சு, சன்னஞ்சு, பவுன்பேட்டு, இன்னும் பல மாதிரிகள் இருக்கிறது. விலாசந்தெரிவித்தால் பிறைஸ் லிஸ்ட் இலவசமாய் அனுப்புகிறோம்.

விலாசம்:
கோ. ப. சீ. அ. வேணுகோபால்செட்டியார் அண்ட் பிறதர்ஸ்,
ஜவுளி & கமிஷன் ஏஜண்டு,
குகை, சேலம். S. I.

தந்தி விலாசம்:
வேணுகோபால்,
சேலம்.

(H. 32.

---

## ஹிஸ்டிரியா என்னும் மூர்ச்சைவியாதி நிவர்த்தியாயிற்று.

என்று திருவானைக்காவல் சீதாராமய்யரவர்கள் பின்வருமாறு சென்னைக் கேஸரி குடீரம் கம்பனியாருக்கு எழுதினர்.

4-வருஷகாலமாய் அடிக்கடி (பவுடிஸ்டைம் காலத்தில் வரும் ஹிஸ்டிரியா) மூர்ச்சைவியாதியால் வெகு ஆபத்தாய்ப்படுத்திருந்த என் பாரியாளுக்கு உம்மிடமிருந்து தருவித்த "லோத்ரா"வுபயோகத்தால் சம்பூரணகுண முண்டாயிற்று.

"கேஸரி குடீரம்"
ஆயுர்வேத ஔஷதசாலை,
எழும்பூர், மதராஸ்.

(Y. 35. A)

---

## ஆப்ரேஷன் இல்லாமலே சுலபமாய் நிவர்த்தியாய்விட்டது.

கேஸரியின் விலையுயர்ந்த ஔஷதங்களின் குணத்தை மிகவும் மெச்சினேன் 'லோத்ரா'வைப்பற்றி என அனுபவத்தை தங்கிசேழுதிப்பிடுகின்றேன். அதற்குச்சமமான ஔஷதம் பூலோகத்தில் வேறொன்றுமில்லையெனத் திண்ணமாய்க் கூறுவேன். என் மனைவிக்கு வயிற்றில் இடதுபாகத்தில் ஒருவிதமான வலி இருந்து வந்தது மேனாட்டு (இங்கிலீஷ்) வைத்தியம் எல்லாம் பிரயத்தனப்பட்டுக் குணமடையவில்லை. பின் ராஜயந்திரி ஆஸ்பத்திரிக்கு அழைத்துப்போனதில் உடனே சர்ப்பமடையவும் சாஸ்திர சிகிச்சைசெய்யவேண்டு மென்றார்கள். இது என் மனைவிக்குச் சம்மதமில்லாததால் பெருங்கஷ்டத்துடன் ஊர் வந்துசேருந் தருணத்தில் வரப்பிரசாதிபோல் "லோத்ரா" வியாபகத்திற்கு வந்ததால் சென்னைக்கு ஆபரேஷனுக்கு வருமுன் இதை உபயோகித்துப் பார்க்க எண்ணங்கொண்டவனாய் தந்திமூலமாய் ஆடர் கொடுத்து ஔஷதத்தை தருவித்துக்கொண்டு முதல்வேளை மருந்து கொடுத்த மாத்திரத்திலேயே குணம் காண ஆரம்பித்தது இரண்டாம் வேளை மருந்து கொடுத்தவுடன் 8-மணிநேரம் நல்ல நித்திரைசெய்தாள். மறுபடி மூன்றாம்வேளை மருந்து மறுநாள் கொடுத்த மாத்திரத்தில் வலியெல்லாம நின்றுவிட்டது. நாளுக்குநாள் சுகமடைந்து வந்தாள். சத்தியமாய் "லோத்திரா" விருல் ஆபரேஷனில்தான் நிவர்த்தியாக வேறுமென்று இங்கிலீஷ் டாக்டர்கள் சொன்னவியாதி ஆபரேஷன் இல்லாமலே சுலபமாய் நிவர்த்தியாய் விட்டது என்று காகிநாடா, சேநாதாவரி டிஸ்டிரிக்ட் போர்ட் இஞ்சினியர் ஆபீஸ், மஹா-ள-ள-ஸ்ரீ பி. சுப்பராயுடு அவர்கள் எழுதுகிறார்.

இந்த ஔஷதத்தைப் பற்றிய புத்தகத்திற்கு உடனே எழுதுங்கள்.

"கேசரி குடீரம்"
ஆயுர்வேத ஔஷதசாலை,
எழும்பூர், மதராஸ்.

(Y 35. B)

---

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கச்சட்டவிச் சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை நா. முத. சொக்கலிங்கம் செட்டியாரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பிய மேற்சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

| இல. | கூ. | ரூபா | ஊர். பெயர். நகைகளின் விபரம். |
|---|---|---|---|
| | | | 1924ஆ. ஐப்பசி. |
| 576 | 16 | 25 | வண்ணார்பண்ணைக்கு சின்னத்தம்பி வேலுப்பிள்ளை பொன் முகப்பில்லாத தாலிக்கொடி 1 |
| 581 | 17 | 10 | வண்ணார்பண்ணைக்கு கார்த்திகேசப்பத்தர் கந்தசாமிப்பத்தர் பொன் தட்டுமணிக்கோர்வை 1 |
| 629 | 28 | 65 | ,, ,, ,, பொன் வெள்ளியுடன் கலந்த கொண்டைப்பூ 1 |
| 630 | 28 | 50 | ,, ,, ,, பொன் சற்தோடு சோடி 1 |
| 631 | 28 | 60 | சோனகதெரு சுலைத்தான் அப்துல்காதர் செயினுமுகம்மது பொன் பழுதுள்ள சவடி 1 |
| | | | ஐப்பசி. |
| 658 | 7 | 50 | கொக்குவில்மேற்கு நாகநாதர் பொன்னுச்சாமி பொன் இரண்டு கல்லில்லாத அலாக்குதிரைப்பவுன் காசுடன் முறிந்த குண்டுச்சங்கிலி 1 |
| 659 | 7 | 80 | வண்ணார்பண்ணைக்கு கார்த்திகேசப்பத்தர் கந்தசாமிப்பத்தர் முழுக்குதிரைப்பவுன் இரண்டுடன் சங்கிலியட்டியல் 1 |
| 660 | 7 | 50 | கோண்டாவில் பசுபதி கந்தையா பொன் ஒன்றில் இருகில்லாத பழுதுள்ள பட்டணக் காப்புச்சோடி 1 |
| 662 | 8 | 50 | வண்ணார்பண்ணைக்கு சிவப்பிரகாசம் நாகலிங்கம் பொன் பீலிக்காப்புச் சோடி 1 |
| 667 | 9 | 15 | வண்ணார்பண்ணைக்கு ஆள்வாப்பிள்ளை தில்லையாபிள்ளை பொன் மோதிரம் திருகில்லாத தோடு சோடி 1 |
| 668 | 10 | 130 | வண்ணார்பண்ணைக்கு சிதம்பரசுப்பையாச்செட்டி வைத்திலிங்கம்செட்டி பொன் டிம்மிப் பதக்கத்துடன் கம்பிப்பூரானட்டியல் 1 பட்டணக் காப்புச்சோடி 1 |
| 702 | 19 | 60 | மானிப்பாய் குட்டித்தம்பி சரவணமுத்து பொன் பழுதுள்ள பட்டணக்காப்புச் சோடி 1 |
| 820 | 22 | 20 | ஆசிப்பத்திரிபடி செல்லையா வேலுப்பிள்ளை பொன் முகப்பில்லாத தாலிக்கொடி 1 |
| | | | ஆகஸ்ட்டு. |
| 758 | 2 | 35 | சந்நிதிமடம் வயிரமுத்து கதிரவேலு பொன் முகப்பில்லாத பழுதுள்ள கம்பிப் பூரானட்டியல் 1 |
| 768 | 3 | 20 | சோனகதெரு பாக்கியம்தம்பி கச்சிமுகம்மது பொன் இமிட்டேசன் கல் மோதிரம் 1 அரும்புத்தலை 2 |
| 771 | 3 | 53 | நல்லூர் கணபதியார் நாகலிங்கம் பொன் பட்டணக்காப்புச் சோடி 1 |
| 786 | 6 | 55 | சோனகதெரு செயினுமுகம்மது முகம்மதுஅப்துல்காதர் பொன் கொண்டைச்சூர் 1 மோதிரம் 1 வெள்ளிப்பாதசரம் சோடி 1 தண்டை சோடி 1 |
| 790 | 6 | 35 | புங்குடுதீவு மா. தம்பையர் மார்க்கண்டேயர் பொன் சற்தோடு சோடி 1 கொண்டைப்பூ 1 வெள்ளிக்காலச்சங்கிலி 1 |
| 791 | 6 | 25 | நீராவியடி கந்தர் ஆறுமுகம் பொன் பட்டக்காப்பு 1 |
| 798 | 7 | 25 | வண்மேற்கு சுப்பிரமணியஐயர் சாமிநாதஐயர் பொன் கெவுடு 1 சாதாமோதிரம் 1 |
| 804 | 10 | 135 | கொக்குவில்மேற்கு ஆறுமுகம் சோமசுந்தரப்பத்தர் பொன் ஒவ்வொருவயிரச் சன்னம் வைத்த குச்சிசோடி 1 |
| 806 | 10 | 65 | வேலணைகிழக்கு ஐயம்பிள்ளை ஆசைப்பிள்ளை பொன் பட்டணக்காப்புச்சோடி 1 |

விற்பனவு:— குரோதன ஆவணிமீ 13உ (28-8-25) வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் எடுபட்டநகை பிரசித்தமாக கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

அரு. செல்லையா உடையார்,
வெந்திஸ்மேஸ்தர்

(Mis 699.)

---

அநேக பரிசுகள், மெடல்கள், நற்சாக்ஷிகள் பெற்று உலகெங்கும் புகழ்பெற்றது.

25—8—1923-ல் சென்னையில்நடந்த தமிழ்வைத்தியகான்பரன்ஸ்அண்டு மருந்துக்கண்காக்ஷியில் பல்லோரஸ் முதல்தர தேவஔஷதங்களைச் சார்ந்தமெடலும், வைத்தியபதிப்பட்டமும் பெற்ற

உலகம் புகழ்வது




உள்ள நாளும் மறவாதது

சூலை, குஷ்டம், ரணம், மேகம் முதலிய சகல வியாதிக்குங் கைகண்டது

பழனி, சி. எம். சாமி

# குரு தாம்ர பஸ்பம்.

முப்பூவினால் தளுக்கற்றிறது; களிம்பற்றது; வாந்தி முதலிய கெடுதிகள் ஒன்றுஞ்செய்யாதது; பத்தியமில்லை. வியாதிகளை விபரமாய் எழுதவும்.

பலனில்லாவிடில் பணந் திருப்பிக் கொடுக்கப்படும்.

எந்த மருந்திலும் தீராத வியாதிகள் இதில் அவசியந் தீரும். மறுமுறை வியாதி திரும்பி வராது. இது சகல வியாதிகளையும் வேரறுக்கும் சக்தி வாய்ந்தது.

சூலை, குஷ்டம், திமிர், ரணம், மதமதப்பு, தடிப்புகள், கிரந்திகள், பத்துகள், கைகால் ரணங்கள், குன்மம், மேகம், பவுத்திரம், கண்டமாலை, சூலைநீர் முதலிய சகல கர்மவியாதிகளும் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும்.

குறைநோய் சம்பந்த வியாதிகள், விரல்கள் அழுகிப்போயிருந்தாலும்சரி, அம்மட்டில் ஆறிவிடும். இது குஷ்டம், கருமேகம், வெண்மேகம், செயமேகம் முதலியவைகளுக்கு மகா அருமையானது. இதுபோன்ற மருந்து எங்குங் கிடைப்பதரிது.

80 வேளை மருந்து ரூபா 40. 40 வேளை மருந்து ரூபா 20. 20 வேளை மருந்து ரூபா 10.

ஏழைகளுக்குப் பாதி விலை. பிரபுக்களுக்கு விலை வேறு. வி. பி. சார்ஸ் பிரதியேகம்.

நற்சாட்சி.

தேகமெல்லாமிருந்த மேகப்படைகள் இருந்த இடந் தெரியாமல் மறைந்துவிட்டன. கைகால் விரல்களிலிருந்த ஆறாத மேக ரணங்கள் பூரா ஆறிவிட்டன. முகவசீகரமும் பசியும் உண்டாயிருக்கின்றன. K. பழனியாண்டிப்பிள்ளை, செருத்தூர், லால்குடி, திருச்சி.

தங்கள் தாமிரபஸ்பம் 64 வேளை சாப்பிடக் கொடுத்ததில் குஷ்ட ரோகம் குணமாயிற்று. சரீரத்திலுள்ள மேக நோய்கள் நீங்கி பாதத்தில்மட்டும் கொஞ்சம் இருக்கிறது. முகதேஜஸ் உண்டாயிருக்கிறது. தவிர வேறு ஒருவருக்கு சூலைநோய் (பித்த குன்மம்) 6 வேளையில் குணமாயிற்று. இன்னும் 80 வேளை மருந்து வி. பி. யில் அனுப்பவும்.

சி. பி. நாராயணபிள்ளை, சப் போஸ்மாஸ்டர், சர்ச்சில் ரோட், ரங்கூன். 4-11-24.

## நிகரற்ற மன்மத கோலாகல குளிகை.

அபூர்வ சக்தி வாய்ந்தது! ஆச்சரியகுணமுள்ளது!
புதியபலத்தைக்காட்டும்! போனபலத்தை மீட்கும்!
ஒருமுறை பரீட்சிக்கவும்! அதை இன்றே பார்க்கவும்.

இதற்கு நிகரான மருந்து புவியிலெங்குமில்லை. ஒரே குளிகையில் பரீட்சிக்கலாம். எவ்வித பலஹீனம், நரம்புத்தளர்ச்சி முதலியவைகள் நீங்கி நல்ல ஜீரணம், ரத்தவிர்த்தி உண்டாகும். வீரியகட்டும், இழந்த பலமும், ஆண்மையும் திரும்ப உண்டாகும். இல்வாழ்வின் இன்பத்தைச் செலுத்த ஊக்கத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின ஔஷதமில்லை. பரீட்சைக்கும் பலனுக்கும் உத்தரவாதம்.

120 குளிகை ரூபா 10. 60 குளிகை ரூபா 5. 30 குளிகை ரூபா 3. மாதிரிக்கு 20 குளிகை 2. வி. பி. சார்ஸ் வேறு.

திருச்சி கா. இ. மு. இப்ராஹிம் 3-1-23-ல் எழுதுகிறார்:

தங்கள் மன்மத கோலாகல குளிகையைச் சாப்பிட்டதில் இரத்தத்தைச் சுத்திசெய்து நரம்புத் தளர்ச்சியை நீக்கி நல்ல பலத்தையும் வீரியத்தையும் கொடுத்து உற்சாகத்தையும் இன்பத்தையும் தருகிறது. இன்னும் 3 ரூபாய் குளிகை வி. பி. யில் அனுப்பவும்.

சித்த ஆயுள்வேத டாக்டர்,
**C. மலையப்பசாமிப்பிள்ளை,**
நித்தியானந்த மெடிக்கல் ஹால்,
பழனி.

(Q. 64 A)

---

## சுரத்தை நீக்கும் அற்புதமான மருந்து.

குளிர் (தலைப்பன்) காய்ச்சல் முதலிய சகல விதமான சுரங்களையும் டக்ரர் மைக்கோயின் "சுரசங்காரி" ஔஷதம் உடனே மாற்றிவிடும். டக்ரர் மைக்கோயின் சுரசங்காரி யென்னும் மருந்து எவ்வகைச்சுரத்தையும் மந்திரவசத்தால் மாற்றுவதுபோல உடனே மாற்றிவிடுகின்றது. மற்றும் வைத்தியர்களினால் மாற்றமுடியாத நெடுநாட்பட்ட எவ்வகைச்சுரமும் இந்த மருந்தில் நாலு மூன்று போத்தலை உபயோகிப்பதனால் முற்றாக மாறிவிடுகின்றது. ஒருமுறை பரிட்சித்துப் பாருங்கள். ஒருபோத்தல் கொண்ட மருந்தின்விலை ரூபா 1 சதம் 50. இம்மருந்து கொழும்பு கார்ஜில்ஸ் (Cargills Ltd) கம்பனியிலும் மற்றும் மருந்துச்சாலைகளிலும் பெறற்பாலது.

(Y 47)

---

## புதிய தினுசுகள் சகாய விலைகள்

### நூதனமான பட்டு ஜவுளிகள்.

எங்களிடம் தற்காலம் நாகரிகத்திற்கேற்ற பனாரிஸ், பெங்களூர், சேலம், கோயம்புத்தூர், கொர்னாடு, காஞ்சீபுரம், கும்பகோணம், தஞ்சாவூர், பாடிப்பேட்டை, பட்டணம், பாரிஸ் பட்டு முதலிய தினுசுகளில் சுத்தமானபட்டுச்சேலைகளும் ஜரிகைநூல் சேலைகளும், பட்டுச்சரிகைச் சால்வைகளும் தினுசுகளும் தயாராயிருக்கிறது.

ஒருதடவை வாங்கிப் பார்த்தால் அதின் நயம் தெரியும். வெளியூர் ஆடர்கள் வி. பி. மூலமாக அனுப்பப்படும்.

பி. ஆர். அனந்தநாராயணய்யர்,
ஜவுளி வியாபாரம்,
205, செட்டித்தெரு,
கொழும்பு.

P. R. Ananthanarayana Iyer,
Silk & Cloth Merchant,
205, Sea Street,
COLOMBO.

Y. 39).

---

## சாலாமிஸ்திரி லேகியம்

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாறு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம் சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது,

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்தலேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0. அரைரூத்தலுக்கு ரூபா ௧0. கால் ரூத்தலுக்கு ரூபா ரு தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினாங்கு முதலிய தொடு வாயிராச்சியப்பகுதிக்கு வி. பீ. சட்டமில்லாததினால் முன் மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதாரவைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்று,
மட்டக்களப்பு,
சிலோன்.

(M. 36.)

---

வான்முகில் வழாது பெய்கமலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

---

Printed and Published by Pandit V. T. Sambandhan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.